
# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

— Page. No — 105 —

| மலர்: 9<br>இதழ்: 3<br>விலை 25 ந.பை | ஹேவிளம்பி ௵ ஆனி ௴<br>ஜூன் — ஜூலை '57 | வருட<br>சந்தா<br>ரூ. 2-4-0 |
|---|---|---|

ACC. No. 18582



திருஞான சம்பந்தர் திருமயிலையில் பதிகம் பாடி
அங்கம்பூம் பாவையை எழுப்புதல்

பெரியபுராணச் சித்திர விளக்கம் 39 பக்கம் 99

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. அகஸ்தியர் முருகன் | (திருப்புகழ் மணி) ... | 97 |
| 2. என்பு பெண்ணுக்கிய ஏற்றம் | (கி. வா. ஜ.) ... | 99 |
| 3. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் | (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.) ... | 104 |
| 4. அகரமுமாகி—திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) ... | 110 |
| 5. ஆசையும் அகந்தையும் | (அ. கி. ரங்கராஜன்) ... | 117 |
| 6. கீதை காட்டும் பாதை | (அ. ராமமூர்த்தி) ... | 122 |
| 7. கொள்வோர் குறிப்பால் குற்றமும் குணமாம் | (T. H. விவேகாநந்தம் பிள்ளை B.A.B.T.) ... | 126 |
| 8. ஸ்ரீ சிவாசர் | (ரஸபதி) ... | 134 |
| 9. Three Suggestions | *(Thiruppugal Mani)* ... | 144 |

## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர். சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

| | | |
|---|---|---|
| மலர் 9 | ஹேவிளம்பி ௵ ஆனி ௴<br>ஜுன் - ஜுலை—57 | இதழ் 3 |


## அகஸ்தியர் முருகன் - 1

(திருப்புகழ் மணி)

"வசிஷ்டர் காஸ்யபர் மகத்தான யோகியர்
அகத்திய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுதத பாவினில் பொருட்கோல மாய்வரு
முருகோனே"

ஸ்ரீ அருணகிரி இவ்வாறு திருக்கோண மாமலைத் திருப்புகழில் பாடி இருக்கின்றார். முருகனை எங்கும் காணலாம். பேத அபேதமொடு உலகாய் நிறைவதும் அவனே யாதலால், அகக்கண் திறந்த ஞானிகளுக்கும் தோன்றிடுவான். ஆயினும் முருகனைப் பொருட் கோல மாய் உணர்வதும் போற்றுவதும் ஒரு தனிச் சிறப்பு. அன்பினாலன்றி அவனை அறிய முடியாது. காண முடியாது. கலக்கவும் முடியாது. பக்தியினாலன்றி இவை சாத்தியமில்லை என்று கண்ணன் கூறிவிட்டான். கீதையில் அர்ச்சுனனுக்கு சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

---

உண்மையை காட்டாமல் என்னுடுமெய் போல்தொடர்ந்த
பொய்ம்மைவிட் டின்புருவம் பூணும்நாள் எந்நாளோ.

"பக்தியா த்வனன்யா சக்ய
அகமேவம் விதோர் ஜுனை
ஞாதும் த்ரஷ்டும்ச தத்வேன
ப்ரவேஷ்டும்ச பாந்தப"

ஆகையால் தெய்வத்தை அறியும் ஞானம் கூட பக்தியால்தான் வருமென்பதும் ஏற்பட்டது.

மகாத்மாக்கள் பக்தியால் அறிந்த முருகனை தங்கள் பாடல்களில் பாடி இருப்பதால், அந்தப் பாடல்களில் பொருட்கோலமாய் நிற்கின்றுனும். எந்தப் புகழ் பாடினுலும், பொருள் தெரிந்து பாடுபவரே செல்வர் என்றுர் ஸ்ரீ மாணிக்கவாசகர். திருப்புகழில், தான் இருப்பதாகச் சொன்ன முருகன் வாக்கை திருப்புகழ் பாடும்போதெல்லாம் யாவரும் உணரலாம். அத்புதமான கோவில் திருப்புகழ். உட்பொருளை உணர்ந்து பாடிவிட்டால் முருகன் முன்னே தோன்றிடுவான். அகஸ்தியர் பாடல்கள் சில இப்பொழுது நொச்சூர் கிராமத்திலிருந்து ஸ்ரீ சிவயோகி ஸித்தானந்தா வெளியிட்டு வருகிறுர்கள். அவற்றில் ஒரு பாட்டு மிகவும் அகத்தை உருக்கிடும் பாட்டாகக் காணப்படுகின்றது.

ஷண்முக நாயகன் தோன்றிடுவான் சிவ
சதகுரு நாயகன் தோன்றிடுவான் — கண்களி
ஞற்கண்டு போற்றிடலாம் — கொடுங்
காலத்தை காலனை மாற்றிடலாம்

பத்துவமாம் திணைக் காட்டினிலே — அவன்
பக்தர் நுழைந்திடும் வீட்டினிலே — மிக்
குயர்வாம் மலைக் கோட்டினிலே — அருள்
மேவும் அகத்தியன் பாட்டினிலே.

அகஸ்தியர் பாட்டினிலே முருகன் தோன்றிடுவார் என்றுர். அடியார் சத் சங்கத்தை விட்டு பிரிந்து நிற்க மாட்டாராம். சத் சங்கத்தில் பொருட்கோலமாயும் அருட்கோலமாயும் காணப்படுவான் என்றுர்.

---

**உலக வாசனையகன்று உண்மை தனக் கேயிணங்கி**
**கலகஜுவர் பின்வாங்கக் காணும்நாள் எந்நாளோ.**

# என்பு பெண்ணுக்கிய ஏற்றம்

(கி. வா. ஜகந்நாதன்)

இறைவன் திருவருளால் சமணரை வென்ற திருஞான சம்பந்தப் பிள்ளையார் சில காலம் மதுரையில் தங்கி ஆலவாயுடைய பெருமானை வழிபட்டுப் பலதிருப்பதிகங்களைப் பாடியருளினர். அப்பால் திருக்கூட்டத்தாருடன் பாண்டி நாட்டில் உள்ள திருத்தலங்களுக்குச் சென்று போற்றித் திருப்பதிகம் பாடினர். அவர்களுடன் பாண்டியனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் உடன்சென்றனர்.

சம்பந்தப் பெருமானுக்கும் சோழ நாட்டுக்குப் போகும் விருப்பம் உண்டாகவே, அதனை அறிந்த பாண்டிய அரசனும் அவன் தேவியாரும் அமைச்சரும் அவர் பிரிவை ஆற்றுமல் தாமும் உடன்வருவதாகக் கூறினர். அதுகேட்ட பிள்ளையார், " நீங்கள் இங்கேயே சிவநெறியைப் பாது காத்துக் கொண்டு வாழ்வீர்களாக!" என்று ஆசி கூறி விடைப் பெற்றுப் புறப்பட்டார்.

சோழநாட்டை அடைந்த பெருமான் திருக்கொள்ளம் பூதூர் என்னும் தலத்துக்குச் செல்லும் வழியில், அங்கே இருந்த முள்ளியாற்றில் பெருவெள்ளம் வந்துவிட்டது. கோல் அண்டாதபடி வெள்ளம் வந்தமையால் ஓடக்காரர்கள் ஓடத்தைச் செலுத்தாமல் கரையில் கட்டிவிட்டுப் போய்விட்டார்கள். ஓடம் விடுபவர் யாரும் இல்லாமையால் ஞானசம்பந்தரும் பிறரும் அக்கரை செல்லமுடியாத நிலையில் இருந்தனர். அப்போது அப்பெருமான் ஓடங்களின் கட்டை அவிழ்த்துத் தொண்டர்களை ஏறச் செய்து தாமும் ஏறிக் கொண்டார். ஏறியபின், "கொட்டமே கமழும்" என்ற பதிகத்தைப் பாடியருளவே, ஓடங்கள் யாதோரிடையூறுமின்றி அக்கரைப் போய்ச் சேர்ந்தன. கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலை நண்ணிய பிள்ளையார் எம்பெருமானைப் போற்றிப்பாடினர். அப்பால் வேறு திருப்பதிகளை இறைஞ்சித் திருநள்ளாற்றை அடைந்தார். அங்கே இறை

---

**அவம்அவம் என்னும் அகிலத் தளையகல**
**சிவம்சிவம் என்று தெளிவுபெறல் எந்நாளோ.**

வனை வணங்கி வேறு தலங்களுக்கும் சென்று போதி மங்கை என்ற இடத்தைச் சார்ந்தார்.

அங்கே பௌத்தர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். ஞான சம்பந்தரும் திருக்கூட்டத்தாரும் அவ்வழியே போகும் போது, "பரசமய கோளரி வந்தான்" என்று திருச்சின்னம் ஊதினார்கள். அதுகேட்ட பௌத்தர்கள் சினந்து வந்து "எங்களை வென்ற பிறகல்லவா இப்படித் திருச்சின்னம் பிடிக்கவேண்டும்?" என்றார்கள். அவர்களுடைய தலைவன் புத்தி நந்தி என்பவன் வெகுண்டு விலக்கினான். அப்போது சம்பந்தப் பெருமானுடைய திருப்பதிகங்களை எழுதும் பேறுடைய ஓரன்பர், "புத்தி நந்தியின் தலைமேல் இடிவிழ" என்று கடிந்து கூற, அவருடைய வாக்கு மந்திரமாகப் பலித்தது. புத்த நந்தியின் தலைமேல் இடிவிழுந்து தலை வேறு உடல் வேறு ஆனான்

இந்தச் செய்திகளைச் சம்பந்தப்பெருமான் திருச்செவியில் அன்பர்கள் சார்த்தவே அவர், "அவன் தலைவிதி இது போலும். யாவரும் ஹரஹர என்று சொல்லி இறைவனை ஏத்துங்கள்" என்று கூறினார். உடனே கடல் முழக்கைப் போல எங்கும் ஹரவொலி எழுந்தது.

தம்முடைய தலைவன் இறந்தது கண்ட பௌத்தர்கள் மருட்சியும் வெருட்சியும் கொண்டு சாரிபுத்தன் என்பவனைத் தலைவனாக்கி முன்னிட்டுக் கொண்டு, வாதிடுவோம் என்று புகுந்தனர். ஆளுடைய பிள்ளையார் இறைவன் திருவருளை எண்ணி வாதிடச் சம்மதித்தார். "உங்கள் தலைவன் யார்! முத்தி எத்தகையது?" என்ற கேள்விகளைச் சம்பந்தர் கேட்கச் சாரிபுத்தன் விடை கூறினான். சம்பந்தர் மேன்மேலும் தடைகளை எழுப்ப அவற்றிற்குப் பௌத்தர் தலைவன் சமாதானம் கூறிவந்தான். இறுதியில் பிள்ளையாருடைய வினாக்களுக்கு விடைகூற இயலாமல் தோல்வியுற்றான். அப்போது பௌத்தர் யாவரும் சம்பந்தரை வணங்கிச் சைவரானார்கள்.

போதி மங்கையினின்றும் புறப்பட்டு வரும்போது பிள்ளையார் அப்பர் சுவாமிகள் எங்கிருக்கிறார் என்று வினவி, அவர் திருப்பூந்துருத்தியில் இருப்பது தெரிந்து

**அகந்தை யிருளின் அறிவிலாப் பேயகன்று**
**சுகம்தருமெய்ஞ் ஞானத் தொடர்புபெறல் எந்நாளோ.**

அவரைக் காணப் புறப்பட்டார். திருப்பூந்துருத்தியை அணுகும்வழியில் சம்பந்தரும் திருக்கூட்டத்தாரும் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் வருகையைத் தெரிந்து கொண்ட அப்பர் சுவாமிகள் தாமே எதிர்கொண்டுவந்து, ஒருவரும் அறியாதபடி கீழ் விழுந்து வணங்கிக் கூட்டத் தோடு கலந்துகொண்டு, சம்பந்தப்பிரான் ஊர்ந்து வரும் சிவிகையைத் தாங்குவாரோடு ஒருவராகச் சுமந்து கொண்டு, இந்த நிலேகிடைத்ததனல் பெரு மகிழ்ச்சியோடு வந்தார்.

அப்போது சம்பந்தப் பெருமானுடைய திருவுள்ளத் தில் ஏதோ ஒருவகைக் கலக்கம் உண்டாக, "அப்பர் இப் பொழுது எங்குற்முர்?" என்று கேட்டார். உடனே அவர் "யான முன்பு செய்த தவத்தினலே தேவரீர் அடிகளைத் தாங்கி வரும் பேறு பெற்று உயர்ந்தேன்" என்று கூறினர்.

அந்த வார்த்தை கேட்டதும் துணுக்குற்றுப் பிள்ளையார் விரைவில் கீழே இறங்கி, "இவ்வாறு செய்தது என்ன!" என்று அப்பரை வணங்கினர். அப்பரோ, "ஞான சம்பந்தப் பெருமானுக்கு வேறு எவ்வாறு செய்வது?" என்று அவர் காலில் வீழ்ந்து வணங்கினர். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி உருகுவதைக் கண்ட அடியார்கள் யாவரும், அவ்விருவரையும் நிலமுறவணங்கித் தலையின் மேற் கைகுவித்து, "நாம் உயர்ந்தோம்" என்று களிக் கூத்தாடினர்கள்

நாயன்மார் இருவரும் திருப்பூந்துருத்தியில் உள்ள திருமடத்துக்குச் சென்று தங்கினர். சம்பந்தர் மதுரை சென்று ஆற்றிய அற்புதங்களை யெல்லாம் கேட்ட அப்பர் அவரைப் பாராட்டி வாழ்த்தினர். தாம் தொண்டை காட் டுத் தலங்களைத் தரிசித்து வந்த செய்தியை அவர் கூற, ஞானப் பிள்ளையாருக்கும் அவற்றை தரிசிக்கும் ஆர்வம் உண்டாயிற்று. அப்பர் சுவாமிகள் மதுரைக்குச் செல்லும் கருத்தை யுடையவராயினர். இருவரும் விடைபெற்றுக் கொண்டனர்.

ஞான சம்பந்தப் பிள்ளையார் சீகாழி வந்தடைந்து தோணிபுரேசரை வணங்கி இன்புற்முர், அங்குள்ள பெரு

---

சதித்தெய்த்த மாயைச் சார்பகல, இன்பநதி
குதித்துந்திக் கோபதிபால் கூடும்நாள் எந்நாளோ.

மக்கள் பாண்டிநாட்டு நிகழ்ச்சிகளை யெல்லாம் திருக்கூட்டத்தினர் வாயிலாகக் கேட்டு இன்புற்றார்கள்.

பிள்ளையார் சில காலம் சீகாழியில் தங்கியிருந்து பின்பு தொண்டை நாட்டுத் தலங்களைத் தரிசிக்கப் புறப்பட்டார். பல தலங்களைத் தரிசித்து வழிபட்டுக் காஞ்சிக்கு அருகில் உள்ள திருவோத்தூர் என்னும் திருப்பதியை அடைந்தார்.

அத்தலத்தில் இறைவனைத் தொழுது தங்கியபொழுது ஓரன்பர் தம் குறையொன்றைத் தெரிவித்துக்கொண்டார். "இறைவன் திருத்தொண்டின் பொருட்டுச் சில பனைகளை வைத்து வளர்த்தேன். அத்தனையும் காய்க்காத ஆண்பனைகளாக இருக்கின்றன. நான் என் செய்வேன்! இது கண்டு இங்குள்ள சைனர்கள் என்னை இழித்துப் பேசுகிறார்கள்" என்று கூறி வருந்தினார். அது கேட்ட சம்பந்தர் ஒரு திருப்பதிகம் பாடவே அவ்வாண்பனைகள் யாவும் பெண்பனைகள் ஆயின. முன் பரிகசித்த சைனர் அது கண்டு நாணினர். சிலர் ஊரைவிட்டோடினர். சிலர் சைவராயினர்.

பிறகு சம்பந்தர் காஞ்சி சென்று சிலநாள் தங்கி வழிபட்டு, திருவாலங்காடு முதலியவற்றை தரிசித்துக்கொண்டு, திருக்காளத்தி சென்று பணிந்துபதிகம் பாடினார். பின்பு திருவொற்றியூர் வந்து சேர்ந்தார்.

அக்காலத்தில் மயிலாப்பூரில் சிவநேசர் என்ற வணிகர் சிவபெருமானிடம் பேரன்புடையவராக வாழ்ந்து வந்தார். அவர் அளவற்ற செல்வம் உடையவர். இவருக்குப் பல காலம் குழந்தை இல்லாமல் இருந்து கடைசியில் இறைவன் திருவருளால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. பூம்பாவையென்று பெயரிட்டு அம் மகவை வளர்த்து வந்தார். அவள் வளர வளர, வணிகர் அவளை யாருக்கேனும் மணம் செய்து கொடுத்துத் தம் நிதியம் அத்தனையும் அவனுக்கே அளிக்க எண்ணினார். ஞானசம்பந்தப் பெருமானுடைய பெருமையையும், மதுரையில் சைனர்களோடு வாதிட்டு வென்று மன்னனுடைய வெப்பையும் கூனையும் நீக்கிய அருட்செயலையும் கேள்வியுற்ற, அவருக்கு அப்பெருமானிடம்

---

**விழலாகி வேதித்த வீண்வினைகள், ஞான**
**அழலில் அழிந்தொழியல் ஆகும்நாள் எந்நாளோ.**

மிக்க அன்பு உண்டாயிற்று. ஒருநாள் தம் சுற்றத்தாரும் பிறரும் சூழ இருக்கையில், "என் மகளும் என் உடைமையும் யானும் ஞானசம்பந்தப் பெருமானுக்கே உரியோம்" என்று உறுதி மொழி கூறினர்.

பூம்பாவை ஒருநாள் பூக் கொய்யும்போது பாம்பு கடிக்க உயிர் நீத்தாள். மணிமந்திர ஒளஷதங்களால் அவளை உயிர்ப்பிக்க முயன்றும் இயலவில்லை. சிவநேசராகிய வணிகர் அவ்வுடம்பைத் தீயிட்டுவிட்டு என்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் சேமித்தார். "சம்பந்தப் பெருமானுக்குரிய இதை அவரிடமே சமர்ப்பிப்பேன்" என்று கூறி, அக்குடத்துக்கு ஆபரணம் புனைந்து பூம்பாவை வளர்ந்திருந்த கன்னிமாடத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தார்.

ஆளுடைய பிள்ளையார் திருவொற்றியூருக்கு வந்திருப்பதையறிந்த வணிகர், மயிலை முதல் ஒற்றியூர் வரையில் நடைப் பந்தல் போட்டு அலங்காரம் செய்து அப்பெருமானை வரவேற்கப் புறப்பட்டார். அவரை மயிலாபுரிக்கு அழைத்து வந்து செய்திகளை யெல்லாம் கூறினர். சம்பந்தப்பிள்ளையார் யாவற்றையும் கேட்டுணர்ந்து நேரே ஆலயம் சென்று கபாலீசரையும் கற்பகாம்பாளையும் வழிபட்டார். பிறகு புறம் போந்து எலும்புள்ள குடத்தைக் கொண்டு மதிற் புறத்தே வைக்கச் செய்தார் அப்படியே சிவநேசர் செய்தார். சம்பந்தர் இறைவன் திருவருளை நினைந்து, "மட்டிட்ட" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

அப்போது குடம் உடைந்து அத்தனை ஆண்டுகட்கும் உரிய வளர்ச்சியோடு அழகே உருவமாகப் பூம்பாவை உருப்பெற்று வந்து, இறைவனைத் தொழுது சம்பந்தப் பிள்ளையாரையும் தொழுது நின்றாள். யாவரும் வியப்புக் கடலில் ஆழ்ந்தனர்.

அப்போது சிவநேசச் செட்டியார் பிள்ளையாரை வணங்கி, "இந்தப் பெண்ணைத் தேவரீர் திருமணம் செய்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர்.

பிள்ளையார், "நீர் பெற்ற பெண் பின்பு பாம்பு கடித்து இறந்து போனாள். இறைவன் கருணையினால் யான் உண்

---

உண்டுறங்கிச் சுற்றி உடலுக் குழைத்த மதம்
விண்டுபே ரின்பென்னை விழுங்குநாள் எந்நாளோ.

டாக்கினவள் இவள். ஆதலின் நீர் சொன்னபடி செய்தல் முறையன்று" என்று சொல்லவே, சிவநேசர், "இவளை வேறு யாருக்கும் மணம் செய்து தரமாட்டேன்" என்று கூறிக் கன்னிமாடத்தில் இருக்கச் செய்தார். அப்பெண் தவம் புரிந்து இறைவன் திருவருளை எய்தினள்.

என்பு பெண்ணுக்கிய இளந்திருவாளராகிய சம்பந்தப் பிள்ளையார், மயிலையை நீங்கி வேறு பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு சீர்காழியை அடைந்தார்.

---

# அருணகிரியும் ஐம்பூதத்தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்க பிள்ளை, B.A ,B T.)

பின் சேர்க்கை:

பிருதிவிதலம் காஞ்சி என்பதே பெருவழக்கு. ஆயினும் சோழநாட்டிற்குப் பிருதிவி தலமாக அமைந்தது திருவாரூர். ஆர் என்றால் மண் என்பது பொருள். ஆகவே ஆரூர் என்பது பிருதிவிதலம் ஆகிறது அதற்கேற்ப இத்தலத்தில் இறைவனார் புற்றிடங் கொண்டவராய் எழுந்தருளியிருப்பதும் குறிக்கத்தக்கது. இது நமது சமய குரவர்களில் மூவர் பாடல்களும் கொண்டது. திருஞானசம்பந்தர் 5 பதிகங்களும், திருநாவுக்கரசர் 21 பதிகங்களும், திருநாவலூர் நம்பிகளான சுந்தரர் 8 பதிகங்களும் அருளிச் செய்துள்ளனர். இது எல்லாவகைச் செல்வங்களும் பெற்றுள்ளமையின் "சிறை செல்வத் திருவாரூர்" எனப் போற்றப்படுவது. இதிலுள்ள ஆலயம் 'பூங்கோயில்' எனக்கூறப்படும். நம் அப்பரடிகள் போற்றியுள்ள 'ஆரூர் மூலட்டானம்' எனப்படுவதும் இதுவே.

ஆரூர் ஆலயப்பகுதிகள்

(1) பெரிய கோயிலாகிய திரு மூலட்டானத்தின் இரண்டாம் சுற்றில் அமைந்துள்ளது திருவாரூர் அரநெறி என்பது. இது மேற்கு நோக்கியுள்ளது. இங்குத்தான்

---

மாதாசையை மறந்து மாதேவனை நினைந்து
போதானந்தப் போகம் புசிக்கும்நாள் எந்நாளோ.

சமணர்கள் வியக்கும்படி நம்பி நந்தி (நமிநந்தியடிகளு யனூர்) நீரால் திருவிளக்கிட்ட அற்புதம் நிகழ்ந்தது. இதனை நாவரசர் 'நந்திபணி கொண்டருளும் நண்பன்' எனப் பாராட்டியுள்ளார்.

(2) இப்பெரிய கோயிலின் தென்மேற்கில் துலா நாயனூர் (தூவாய் நாயனூர்) கோயில் உள்ளது. இந்நகரை அழிக்க வருணன் விட்ட கடலை உண்ட சிறப்பினுல் 'பரவை (கடலை) உண் மண் தளி' எனப்பெயரும் பதிகமும் பெற்றது. இங்குள்ள சிறிய குளம் சுந்தர மூர்த்திகளுக்கு வலக் கண் பார்வை யீந்த பெருமை உடையது.

(3) நாகபிலம் என்று ஒரு பிலம் (பள்ளம்) பெருங் கல்லால் மூடப்பட்டுள்ளது. இப்பகுதி பெரிய கோயிலுக் குள்ளேயே இருக்கிறது. இங்குள்ள ஆலயத்திற்கு ஆட கேச் சுரம்' என்று பெயர். இவ்வாலயத்திலுள்ள ஆட கேசரைப் பணிந்து பலர் பொன்னுலகு புக்கனர். விண் ணுட்டிலேயே இடமில்லாதபடி அத்துணை யடியவர் சுவர்க்கம் சென்றமையின், பின்னும் பலர் வராதபடி தடை செய்ய எண்ணிய தேவேந்திரன், "அரதன சிருங்கம்" என்ற மலையால் பிலத்தை அடைத்து விட்ட செய்தி திருவாரூர்ப் புராணம் செப்புகின்றது.

## திருவாரூர் சிறப்புக்கள்

(1) இத்தலத்தில் பிறந்தவர் முத்தி யெய்துவர்.

"பிறந்தவர் பிறவாப் பெரும்பதி" (கல்லாடம்).
"துவக்கற அறிந்து பிறக்கும் ஆரும்"
(துறைமங்கலத்தார்).
"முத்தியங்கு உதித்தோர் எய்தும் பதியது"
(பரஞ்சோதி முனிவர்).

இதனுலன்றே 'திருவாரூர்' பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்றுர் நம்பியாரூரர்.

(2) இத்தலத்தை வழிபட்டாலே முத்தி சித்திக்கும் என்பர் ஆளுடைய பிள்ளையார்.

" சித்தந் தெளிவீர்காள்
அத்தன் ஆரூரைப்

---

பவராஜ மூவினைகள் பற்றறவும் நீங்கா
சிவராஜ யோகமெனைச் சேரும்நாள் எந்நாளோ.

பத்தி மலர் தூவ
முத்தி எளிதாமே''

(3) இது சப்த விடங்கத் தலங்களில் முதன்மை யானது. முசுகுந்தச் சக்கரவர்த்தி இந்திரன் பால் பெற்ற ஏழு விடங்கர்களையும் திருவாரூர், திருநள்ளாறு, திரு நாகைக்காரோணம், திருக்காறாயில் திருக்கோளிலி, திருவாய் மூர், திருமறைக்காடு என்ற ஏழு தலங்களில் பிரதிட்டை செய்தனர். ஆதலின் அவற்றில் மூலமூர்த்தி யமர்ந்தருளி யுள்ள தலம் திருவாரூர் ஆகும்.

'' சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில்—பேரான
ஒத்ததிரு வாயமூர் உவந்த திருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்''

இங்குள்ள பெருமானுக்கு வீதி விடங்கர் என்றும், இவர் செய்வது 'அசபா' நடனம் எனவும் கூறுவர்.

(4) திருவாரூர்க் கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, செங்கழு நீரோடை ஐந்து வேலி என்பதனை,

'' அஞ்சனைவேலி ஆரூர் ஆதரித் திடங்கொண்டாரே''
என்றது தமிழ் மறை.

(5) 'திருவாரூர்த் தேர் அழகு' என்பது பழமொழி.

## சிறப்புக்கள்

திருவாரூர்—சோழ அரசர்கள் முடி கவித்தற்குரிய நகரங்கள் ஐந்தினுள் ஒன்று. அவர்கள் இராசதானி யாகவும் இருந்தது. திருமுறை கண்ட ஸ்ரீ அபயகுலசே கரரும், திருத்தொண்டர் புராணம் செய்வித்த அநபாய சோழரும் ஆட்சி புரிந்தது. கலிசெலா நகரம், மூலாதார நகரம், முசுகுந்தபுரம், ஸ்ரீநகரம் முதலிய காரணப் பெயர்கள் ஏற்றது.

'திருவந்திக் காப்பு' விசேட முடையது. சொல்லரசர் போற்றி யருளிய மார்கழி ஆதிரை விழாவும், பங்குனி யுத்தரத் திருவிழாச் சிறப்பும் பெற்றுள்ளது.

இங்குள்ள தியாகராசப் பெருமானுக்கு முசுகுந்தர் இயற்றியதும், இன்று வரை சோழரால் காக்கப் பெற்றது

---

சோறும் கறியுமுண்டு துன்பமல நோய்சுமக்கும்
நாறுடல்சீ சீயென்று நண்ணும்நாள் எந்நாளோ.

மான திருத்தேர் உள்ளது. இதனையே "ஆழித்தேர் வித்தகனை யான் கண்டது ஆரூரே" எனத் தேவாரம் விதந்து கூறுகிறது.

தியாகராஜ மூர்த்தி, திருவாரூர்த் தலம், கமலாலயம்—தீர்த்தம் மூன்றினாலும் சிறப்புடையது.

## வழிபட்டோர்.

அகத்தியன், அசன், இடையன் ஒருவன், அரிச்சந்திரன், மகபதி, இராமன், கருணாகரன், திரிசங்கு, துருவாசர், நளன் முதலியோர் பேறு பெற்றனர். இலக்குமியார் முழுதுள திருவும், அழியா மங்கலமும் பெறுதற்கெனத் தவமியற்றினர்.

"சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னுமா மலராள் வழிபட்டது
வன்னியாறு மதி பொதி செஞ்சடைச்
சென்னியார் திருவாரூர்த் திருநகர்" (சேக்கிழார்)
" . ... . . மலர்மேன் பாவை
முழுதுள திருவும் என்றும் முடிவில் மங்கலமு மெய்த
விழுமிதி னோற்றுப் பெற்ற வியன் திருவாரூர்"
(கச்சியப்ப சிவாசாரியார்).
"திருவினை சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே"
(திருநாவரசர்).

இது சுந்தரமூர்த்திகளது ஆன்மார்த்த தலம். அவர்கள் அவதார லட்சியமாயமைந்த திருத்தொண்ட தொகை செய்தற்குக் காரணமும், தினமும் தரிசனத்திற்கு வரும் தேவர் முதலியோர் சமயம் பார்த்துக் கொண்டு தங்குவதுமான தேவாசிரியன் என்னும் ஆயிரக்கால் மண்டபம் இங்குள்ளது. பரவையாருக்காக திருமுது குன்றத்தில் ஆற்றிலிட்ட பொன்னை எடுத்துத் தந்த கமலாய குளமும், அப்பொன்னை உரையிட்டு உதவிய மாற்றுரைத்த பிள்ளையார் சன்னிதியும் இங்குள்ளது.

அடியவர்களை அவமதித்தமையால் சுந்தரரையும், அவருக்கு ஆதரவு காட்டும் தியாகராஜாவையும் "புறகு" என்ற விறன் மிண்டர், அடியார் அன்பிற் சிறந்த செருத்துணை நாயனர், நாட்ட மிகு தண்டியடிகள், கழற் சிங்கர், சோமாசி

---

**பார்த்ததைப் பார்த்துநாளும் பட்டபுண் பட்டுமாளும்
பாழ்த்தஇப் பிறவிவேரைப் பறிக்கும்நாள் எந்நாளோ.**

மாறனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலிய அடியார்கள் அன்பு செய்து முத்திப் பேறு பெற்றதும் இத்தலத்திலேயாம்.

## அற்புதங்கள்

இந்தப் புண்ணியப் பழம் பெரும் பதியில் நடந்த பலவேறு அற்புதங்களுள், மநுமுறை கண்ட செய்தி மிக மிகச் சிறந்ததும் தொன்மை வாய்ந்தது மாகும். அதனால் தான் இவ்வரலாற்றைச் சங்ககாலத்தை அடுத்து எழுந்த ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் இயம்புகின்றது.

"வாயில் கடை மணி நடுநா நடுக்க
ஆவின் கடை மணி யுகுநீர் நெஞ்சு சுடத் தான்தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்"

இந்த வரலாற்றைக் காலத்தால் மிகப் பிந்தியவராகிய இராமலிங்க அடிகளும் மநுமுறை கண்ட வாசகமாக எழுதியருளினார். எனவே, இதனையே நமது அருணகிரிப் பெருமானும் திருவாரூர் திருப்புகழில் விதந்து ஓதுவாராயினார்.

"சுரபி மகவினை எழு பொருள் வினவிட
மதுவின் தெறிமணி அசைவுற இசைமிகு
துயரில் செவியினில் அடிபட வினவுமின் அதிநிது
துணிவி விதுபிழை பெரிதென வருமநு
உருகி அரகர சிவ சிவ பெறுமதோர்
சுரபி அலமர விழிபுனல் பெருகிட—நடுவாகப்
பரவி அதனது துயர் கொடு தடவிய
பழுதின் மதலையை உடலிரு பிளவொடு
படிய ரதமதை நடவிட மொழிபவன்-அருளாரூர்ப்
படியிலறுமுக சிவ சுத கணபதி இளையகுமர!"

["பசு, (அரசிளங்குமரன் தேரில் சிக்கி இறந்த) தன் கன்றினை எழுப்பும் உபாயமறிந்து, மநுச்சோழனது ஆராய்ச்சி (நெறி)மணியை (க்கொம்பினால்) சென்று அசைக்க, அவ்வொலி, மிக்க துயரை விளைத்து (மன்னவன்) செவியில் ஒலிக்க, (அரசனும்) போய் விசாரணை செய்யுங்கள். பெரும் பாதகச் செயல் ஏதோ நடந்துளது. ஆராயின், ஏதோ அபசாரம் என்றெழுந்து வந்த வேந்தன், உள்ளங்கவன்று "அரகர சிவ சிவ" என்னும்படிச் செய்த

---

தொட்டதுதொட் டென்றென்றும் சுமந்தது சுமந்துழைக்கும்
கட்டவெம்பாழ்ப் பிறப்பைக் கரிக்கும்நாள் எந்நாளோ.

அந்தப் பசுவின் வேதனைக் கண்ணீரைக் கண்டு, நடு நிலையறிந்து பரமனை எண்ணி, பசுவுக்குத் துயரை விளைத்துத் தேரோட்டிப் பழியேற்ற தன்மகனை, உடல் இரு பிளவாகப் படியுமாறு சக்கரத்தையுடைய தேரை நடத்தச் சொன்ன மநு ஆண்டருளிய திருவாரூர் தலமமரும் அறுமுக! சிவகுமர! கணபதி சகோதர!"

திருவாரூரில் நடந்த இந்த அற்புதச் செயலைக் காட்டக் கல்லினால் தேர் முதலியவை செய்யப்பட்டிருப்பது கிழக்குக் கோபுரத்திற் கப்பால் இன்றும் காணலாகும்.

ஆரூரில் மற்றொரு அற்புதம் சுந்தரர்க்காக நடந்தது. திருஒற்றியூரில் சங்கிலியாரை மணந்து மீண்ட செய்தி கேட்டுச் சுந்தரர்பால் ஊடல் கொண்ட பரவையிடம் ஆரூர்த்தியாகர் "கழுது கண் படுக்கும் பானாட் கங்குலில்" தூது சென்றதாகும். இதனை நமது திருப்புகழ் முனிவரர்,

"பரவைக் கெத்தனை விசை தூது
பகரற் குற்றவ ரெனுமாறன்
மரபுக் குச்சித—ப்ரபுவாக
வரமெத்தத் தர—வரவேணும்" (பொது)
'பரவை மனை மீதிலன்று ஒரு பொழுது தூது சென்ற
பரமனருளால் வளர்ந்த—குமரேசா" என்று (பழநித்திருப்புகழ்)

கூறியுள்ளார்.

இவைகளன்றி இங்கு நடந்த அற்புதங்கள் அளவிலடங்கா. நமது அருணகிரியார் பாடல்களாய் இத்தலத்திற்குரியன ஆறு பாடல்களே கிடைப்பன. அவற்றில் மநு முறை கண்ட வரலாறுதான் போற்றப்பட்டுள்ளது.

## திருவாரூர் திருப்புகழ்

இந்த ஆறு பாடல்களுள் ஒரு பாடல் நமது வாழ்நாள் வீணே போகத் தக்கது என்றும், அதற்குரிய செயல்களையும் குறிக்கிறது. "நான் நாணமின்றி உலகினர் ஏசாமல் ஞான நூல்களைக் கற்றும், உள்ளம் கோணி புன்னெறி விட்டு உன்வேலைப் பாடாமலும், கூதாள மாலையை உன் தோளில் அணிவிக்காமலும், உன் புகழைப் பாடாமலும்," சிறந்த

---

**சொன்னதைச் சொல்லியுண்ட துன்பத்தை யுண்டுமாயும்**
**கின்னவெம் பிறவிப்பாசம் கிழியும்நாள் எந்நாளோ.**

வேதங்கட்கும் எட்டாத மெல்லடிமேல் வீழாமலும் என் வாணுள் வீணே போவது தக்கதோ''

"கூசாதே பார் ஏசாதே மால்
கூறு நூல் கற்று—உளம வேறு
கோடாதே வேல் பாடாதே மால்
கூர் கூதாளத்—தொடை தோளில்
வீசாதே பார் பேசாதே சீர்
வேதா நீதா——கழல் மீதே
வீழாதே போய் நாயேன் வாழ்நாள்
வீணே போகத்——தகுமோதான்''

மற்ருெரு பாடலில் "ஈடேறுரில்—கெடலாமோ?" என்னும் ஆராமையே காட்டி' "மாதானத் தனமான—மாஞானக் கழல் தாராய்'' எனமுடிக்கிருர்.

"நீதான் எத்தனை யாதும்—நீடுழி க்குபையாகி
மாதானத் தனமாக—மாஞானக் கழல் தாராய்
வேதா மைத் துனவேளே—வீரா சற்குணசீலா
ஆதாரத் தொளியானே—ஆருிற பெருமாளே''

(முற்றிற்று)

---

உ

# திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

அகரமு மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி—அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி—அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி
இனிமையு மாகி—வருவோனே!
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமுன் ஓடி—வரவேணும்;
மகபதி யாகி மருவும் வலாரி
மகிழ்களி கூரும்—வடிவோனே!

---

கண்டத்தைக் கழித்துத் தள்ளிக் காணுத காட்சிதேடி
அண்டர்நா யகனைக் கூடி அமரும்நாள் எந்நாளோ.

வனமுறை வேடன் அருளிய பூஜை
மகிழ்கதிர் காமம்—உடையோனே !
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடும்—மயிலோனே!
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு—பெருமாளே!

(மகபதி..........மகிழ்......வடிவோனே!)

(பதவுரை.) மகபதி ஆகி—(நூறு அஸ்வமேத) வேள்வி செய்த புண்ணியத்தின் தலைவனாய்; மருவும் வலாரி—இன்ப போகத்தில் மிதக்கும் இந்திரன்; மகிழ் களி கூரும் வடிவோனே—மிக்க மகிழ்ச்சி கொள்ளும் (சொரூபத்) திருமேனி யுடையவனே!

(வனமுறை......பூஜை...உடையோனே!)

வனம் உறை வேடன்—வனவாச வாழ்க்கையன் ஆன (அவைதிக) வேடன்; அருளிய பூசை—செய்த (மெய்ம்மை) வழி பாட்டை; மகிழ் கதிர் காமம் உடையோனே—மகிழ்ந்து ஏற்று (இன்பக்) கதிர்காமத்தில் இருப்பவனே!

(செககண...ஆடும்.....மயிலோனே!)

செக கண—(ஆதாரம் இன்றி அந்தரத்தில் சுழலும்) உலகத் தொகுதிகள்;

சேகு—(இடிபடாத) வயிரம் போல்வதாய்;

தகு—(ஒன்றுடன் ஒன்று மோதாத்) தகுதியதாய்;

திமி—சுழன்று ஒலிக்க;

தோது—பொருத்தமாக அமைவு செய்த;

இ திமி என—அன்புக் கடலே என்ற ஒலியெழ,

ஆடும் மயிலோனே—இன்ப நிருத்தம் செய்யும் (சுத்த மாயையான) மயிலை ஊர்ந்து வருபவனே! (தோது + இ = தோதி.)

(திரு........மேவு.....பெருமாளே!)

திரு மலிவு ஆன—அருள் நிறை தெய்வத் தன்மை யுடைய தான; பழமுதிர் சோலை மலை மிசை—பழமுதிர் சோலை மலை மேல்; மேவு பெருமாளே—விரும்பி யெழுந்தருளிய பிரம சைதன்யமே!

---

பள்ளமா யையினில்மூழ்கிப் பழிபாவம் முற்றுமல்
கள்ளவா சனையொழிந்து காணும்நாள் எந்நாளோ.

(அகரமுமாகி......வருவோனே!)

அகரமும் ஆகி—(எழுத்துகட்கெல்லாம் முதன்மை ஸ்தானம் வகிக்கும்) அ எழுத்தின் சொருபமுமாகி;

அதிபனும் ஆகி—(அந்த எழுத்தின் நாதத்தில் இருந்து உதயம் செய் எப்பொருட்கும்) இறைவனும் ஆகி;

அதிகமும் ஆகி—(அந்நாயகத் தன்மையை விரிவாக விளக்கும்) அளவிறந்த அடையாளங்களும் ஆகி;

அகம் ஆகி—(விரிவான இந்த சொருபச் செய்திகள்) அந்தக் கரணங்கட்கு விளக்கமாம்படியும் விளங்கி;

அயன் என ஆகி—பிரமனெனத் திருமேனி தாங்கி; அரியென ஆகி—திருமால் போல உருவம் கொண்டு; அரன் என ஆகி—உருத்திரன் என்ன உருவம் அமைந்து;

அவர் மேலாய்—(மேலுரைத்த) அம்மூர்த்திகட்கும் மேலான மகேஸ்வர சதாசிவராகி;

இகரமும் ஆகி—சிவசக்திகளாகி; எவைகளும் ஆகி—(அச் சத்திகளின் கூட்டத்தால்) எப்பொருள்களும் தோன்ற, அப் பொருள்களில் இரண்டறக் கலந்து;

இனிமையும் ஆகி வருவோனே—இன்ப முழுமையும் தானே யாகி வருகின்ற தலைவனே!

(இரு நில மீதில்........வரவேணும்!)

இரு நில மீதில்—பெரிய இந் நிலவுலகில்; எளியனும் வாழ—(பிறர் முன்) எளிமைப் பட்டுக் கிடக்கும் அடியேனும் வாழ்வு பெற;

எனது முன் ஓடி வரவேணும்—என்முன் (இரக்கம் கொண்டு) விரைந்து எழுந்தருள வேண்டும். (எ—று).

### விளக்கம்

அஸ்வமேதம் எனும் வேள்வி நூறு நடத்துவது விளையாட் டல்ல. இராமர் ஒரு அஸ்வமேதம் நடத்தி, குச லவர்களிடம் பட்ட அவஸ்தை பல. பாண்டவர்கள் பட்ட பாடோ ஒரு பாரதம். நூறு நடத்தி வெற்றி மாலை சூடினவர், மறுமையில் விண்ணுலக அதிபதி யாய் விளங்குவர்.

மாபெரும் சிறப்புப் பற்றி, அவர் பெறும் பெயர் மகபதி. அப்படி வந்த மகபதிகள் பலர். அவர்களுள் ஒரு மகபதி, சிவ

வஞ்சக உடலில்பூமி வாழ்வினில் மயங்கும் நெஞ்சம்
சஞ்சலம் நீங்கி மெய்யைச் சாரும்நாள் எந்நாளோ.

புண்ணியத்தில் சிறந்தான். ஆதலின், தன் இறந்த காலச் செய்திகளை எண்ண லாயினன்.

‘அந்தண் மறை வேள்வி காவல்காரன்’

நம் ஆறுமுகப் பெருமான். அப்பெருமானைச் சிந்தித்து வந்தித்த சிறப்பால், எடுத்த வேள்வி ஒவ்வொன்றும், இடையூறின்றி முடிந்தது.

அதனால் மகபதி யென்று பெயர் பெற்ற யான், ஐந்தரு நிழல், அமுத பானம், அரிவையர் இன்பம் அனுபவிப்பது கருதி, மருவும் வலாரி யென்று கூறி, என்னைப் போகபதி யென்கிறது பொன்னாடு.

போகவடிவம், யோகவடிவம், கோரவடிவம். மூன்றும் குமரனுக்கே உரியன. அவ்வவர் நிலைமைக்குத தக்கபடி, அம்மான் கொள்ளும் கோலம் அவைகள்.

சிவஞானம் சிறந்தார்க்கு, தன் யோக வடிவம் காட்டுகிறான்; அக்ரமம் அளவு மீறிச் செய்வார்க்கு, தன் கோர வடிவம் காட்டிக் கொக்கரிக்கிறான்.

புண்ணிய அளவிற்கு உரியது பொன்னாட்டு வாழ்வு. புண்ணியப் பெருக்கம், போகானுபவங்களாகப் பொங்கி யெழும். அந்நிலைக்கு உரியேம் யாம். அது கருதிய அந்த அத்தன், போக வடிவம் கொண்டு எங்களைப் பூரிக்கச் செய்கிறான். போக வடிவம் கொண்டிலனேல், எங்கட்குப் போக வாழ்வு ஏது?

வலன் என்ற ஒரு அசுரன் இருநதான. தன் தோள் ஆற்றலால், அகில உலகையும் அவன் அடக்கி யாண்டான். அவன் ஒரு வேளை நம் தலையிலும் கை வைப்பானோ என்று அஞ்சினேன்.

வஞ்சம் செய்து, வலனை மாய்க்க நினைத்தேன். எளியவன் போல் உருமாறினேன்; கைகட்டி, வாய் பொத்தி, எதிரில் நின்றேன்.

மாறிய உருவில் இருந்த என்னை, வலன் தெரிந்து கொண்டான். அண்ட கடாகம் அதிரச் சிரித்தான்.

இந்திரா! ஏன் இந்த மாய வேடம்? என்னிடம் எதையோ எதிர்பார்க்கிறாய்! கேள்! வாக்குத் தவற மாட்டான் வலன் என்றான்.

என் நிலைமை தர்ம சங்கடமாய் விட்டது; வருவது வருக என்று துணிந்தேன். நீ—நீ—நீ—என்—வேள்வி...பலி...பசுவாக

---

விலங்கிஉயிர் தேகத்தை விட்டிடுமே என்றெண்ணி
கலங்கும் மனப்பயத்தை கடக்கும்நாள் எந்நாளோ.

என்று வாய் குழறி—நெஞ்சு வரள—உடல் வியர்க்க...அவ்வளவு தான்...என்னால் சொல்ல முடிந்தது.

வலன் கெக்கலி கொட்டிச் சிரித்தான். இந்திரா! மரணம் ஒரு நாள் நிச்சயம் வந்தே தீரும். அம் மரணம், ஒரு சிலர்க்கேனும் அமைதியைத் தருமாயின், அத்தகைய மரணத்தை வலிந்தேற்பான் இந்த வலன் என்றான்.

குண்டத்தின் அண்மையில் இருந்து, தன் தலையை வாளால் தானே தள்ளினான். வாக்கு மனம் காயம் மூன்றையும், ஒரு வழியில் செலுத்திய வலன் வரலாறு இது.

இவ்வரலாற்றில் என் பிழைக்கோ எல்லை யில்லை. அப்படியிருந்தும், வலனை அழித்தேன் என்பது காரணமாக, என்னை வலாரி என்று அழைக்கிறது வையகம். (வல + அரி = வலாரி.)

அறியாமையை அழிக்கும் அறிவான சக்தி, முருகன் திருக் கரத்து வேல். என் வீரமும் ஒரு வீரமா? என்று ஒவ்வொன்றாக எண்ணினான்.

மகத்தை முருகன் காத்ததை எண்ணி மகிழ்ச்சி; போக ரூபத திருந்து உதவலை எண்ணி களிப்பு. விமல முருகன் வீரம் எண்ணி பூரிப்பு மூன்றும் கொண்டானதலின்,

'மகிழ்—களி—கூரும் வடிவோனே' என்றார். (கூர்தல—மிகுதல்).

1. காட்டு வாசியான சந்திமான் எனும் வேடன், கிருத்திகை விரதத்தை அன்பின் மயமாயிருந்து அனுட்டித்தான். வைதிக விதிக்கு விலக்கு இந்த வழிபாடு என்று பிறர் இகழ்ந்தனர். எம்மான் அந்த அன்பினை ஏற்று, அரசாள்க இங்கிலத்தை என்று அருளினன்.

2. கங்கை நதியின் வடபால் உள்ள சிருங்கிபேரக் குகன் எனும் வேடுவன், இராமாவதார ஆட்சி முடிந்தபின், உமையாள் மைந்தனை உள்ளம் உருகி வழிபட்டான். அவன் விரும்பியபடியே கதிர்காமக் கந்தன், அவதாரம் முதல், இராமன் தன் அடிச்சோதி சேர்ந்தவரை நிகழ்ந்த வரலாறுகளை, தன்னிலேயே நிழல் படமாகக் காட்டினன்.

3. ஆரண்யத்தில் ஒரு வேடன்; அவைதிகன் எனினும் முருக பக்தி முதிர்ந்தவன். அவன் வழிபாட்டை மகிழ்கின்றான் ஆறுமுகப் பரமன். ஆர்வத்தின் மிகுதி, வேட பக்தன் மேல் ஆவே சிக்கும்படி நேர்கிறது. அங்நிலையில் அந்தப் பக்தன் ஆடிய திருக்

---

உடல்வாழ் உயிரைத்தூதர் உறுக்கிவலிப் பாரவ்
இடர்நீங்கி ஈசன்தாள் எய்தும்நாள் எந்நாளோ.

கூடதும், புன்னகையும், அருள் நோக்கும், கண்டவர் எவரும் காதல் மிகுந்து, மயில் மழவா! அயில் இறைவா! அருள தர வந்த அறுமுகவா! வா! வா! எம்மைக் கா! கா என்று எட்டுறுப்பும் நிலம் தோய இறைஞ்சினர்.

இச்செய்தி, குறிஞ்சி சில மக்களை எண்ண வரும் எந்த நூலிலும் இருக்கின்றது அல்லவா! இவ்வரலாறுகளைக் குறிக்கிறது "வனமுறை வேடன் அருளிய பூஜை" என்றெல்லாம் மனம் போன போக்கில் எண்ணுவது மரபு அல்ல.

அன்புப் பிழம்பாய் வாழ்ந்த அந்த வனமுறை வேடர் வரலாறு, நம் அமிர்தவசனியில் முருகன் அடியார் பகுதியில் விரிவாக வெளிவரும்; அதில் வரலாற்றை யறிதல் நலம்.

இதைப் பாடுவது பழமுதிர் சோலையில்; அங்கிருந்து எண்ணுவது கதிர்காமத்தை! என்ன இது? என்று மலைக்க வேண்டா!

ஆறுவது ஆதாரம் ஆக்ஞை, அது புருவ நடுவிடம்; பிண்ட தத்துவப்படி அதுதான் பழமுதிர்சோலை. ஆக்ஞையில் நாம ரூபம் உண்டு; ஆனால் அவைகள், புலன்கட்கு எட்டும் அளவில் புரிவது இல்லை. இன்றைய பழமுதிர் சோலையைப் பார்த்தவரும், மூர்த்தமும், மூர்த்திமானும் எங்கே? எங்கே? என்ற கேள்வியைத் தானே எழுப்புகின்றனர்?

ஆக்ஞைக்கு அடுத்த தலம், ஆகாயத்தின் முடிவிடம்; அங்கு இயல்பாகவே நாம ரூபங்கள் இல்லை. அது ஜோதி நிலம்; நாத தலம்; அதுதான் இன்றைய கதிர்காமம். பழமுதிர்சோலையில் பசித்து விழித்துத் தனித்தவர், கதிர்காமத்தில் அத்துவிதமாகக் கலந்து விடுவர்; இது நம் அருள நூற்களின் அறிவிப்பு.

இந் நுட்பமெலாம் இங்கு எண்ணப்பெறும். மேலும், காட்டாள் மன நிலையை, புறஞ்சுவர் கோலம் செய்யும் நாட்டாள் அறிய முடிவதில்லை. கதிர்காமன் ஒரு காட்டாள்தான்; அவனை வழிபடுவானும் வனமுறை வேடன்! இவன் வழிபாட்டில், கண் முந்தியதோ? கை முந்தியதோ? மனம் முந்தியதோ? எது முந்தியது எனலை கதிர்காமன் காண்கின்றான், மகிழ்கின்றான்; அருள்கின்றான் என்பதை எண்ணும் போதே நம் இதயம சிலிர்க்கிறதே!

மாபெரும் இந்திரன் கண்டு மகிழும் வடிவினன், இன்பக் கதிர்காமத்தில இருந்து அருள் செய்கின்றான்; இப்பெருமான் திருமுன் பணி செய்ய, என்ன தவம் செய்தேனோ என்று இன்பம் கொண்டு ஆடுகிறது தெய்வ மயில்.

---

பலவாம் வினைப்போகம் பல்லுலகம் போயுண்(டு)
அலையாமல் அமலற்காள் ஆகும்நாள் எந்நாளோ.

குதி குதி என்று குதிப்பதுதான் கூத்தா? கண் அசைவும் அங்கங்களை அசைப்பதுவும், பரதம் எனும் பெயர் பெற, அதைப் பார்த்துப் பல்லிளிக்க பல ஆயிரக் கூட்டமும் இப்பாவக் கலியின் பண்பாகலாம்.

பலூன்கள் போல் நீ உருட்டி விட்ட அண்ட உருண்டைகள், அந்தரத்தில் இன்றும் சுழன்று கொண்டே இருக்கின்றன. ஒன்று டன் ஒன்று மோதி உடையாதபடி, திசை பிறழாதபடி, உரம் பெற்றிருக்க, இடையறாது காத்து வரும் அன்புக் கடலே என்ற பொருளை வெளிப் படையாகத் தோன்ற, பாவ, ராக, தாள ஞானத்தோடு தாண்டவம் செய்கிறது நம்மை ஆண்டவன் மயில்.

சேச்சே! 'செககண சேகு தகுதிமி தோதி திமி' என்பது, வெறும் தாள ஒற்று என்பது கேலிக் கூதது. பொருளில்லை என்றுரைதது, இருக்கும் பொருளை இழக்கலாமா?

நம் பாவம் அபாவம்; நம் ராகமோ ரோகம்; நம் தாளமோ எகத்தாளம்; இசையிற் சிறந்தார் சரிதை, இன்று அங்ஙனந்தான் இருக்கிறது.

சத்ய நித்ய மெய்த்தவக் குடிலை, மயிலுருக் கொண்டு, ஆடிக் காட்டும் பாவம் ராகம் தாளம் மூன்றும், உபநிஷதக்களின் சாரத்தை உபதேசிக்கும். ஓம். ஓம். (வாழ்க அந்த வளர்ச்சி)

அருள் மிகுந்த தெய்வ இடமெல்லாம், பழமுதிர் சோலையாய்ப் பரிணமிக்குமோ? சோலை மயிலோன், மலைமிசை யேறித் தன் சொருபம் காட்டுமோ என்று எண்ணுதும் எண்ண வைக்கிறது, 'திரு மலிவான பழமுதிர் சோலை மலைமிசை மேவு பெருமாளே' எனும் கடைசியடி.

கருவில் தங்கும் போதும் அ என்றே தங்கும், அகர உருவில் வளரும; பிறக்கிற போதும் அ என்று வாய் திறக்கும்.

ஆ என்று வாய் திற! என்று உபதேசிததுத்தான் தாய், பாலும் சோறும் சேய்க்குப் பரிந்து ஊட்டுகிறாள்.

அகரததில இருநதே எம்மொழி எழுத்துக்களும், உரிய தேவதைகளும், மந்திர தந்திரங்களும், பிற அனைத்தும் தோன் றின. விரித்தால் செய்தி மலை மலையாப் பெருகும்மே!

வாய் திறந்தால் மட்டும் போதுமா? ஒலி புறம் கேட்க உந்தும் முயற்சியும் தேவை. அதுபோல், அகரத்தில் உந்து சக்தி உமைகுமரன்.

---

புண்யபா பங்கள் தமை புறம்போக்கி ஆஆ
வண்ணமற்ற விண்போல் மன்னும்நாள் எந்நாளோ.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"
"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து"

என்பதை மனனம் செய்து இன்புறுவம்; பதவுரையில் சிந்தனை செலுத்துவம்; இப்போது அவ்வளவு போதும்.

அகரமும் ஆதி என்பதற்கு—தூரமாகியும்; இகரமும் ஆதி என்பதற்கு—சமீபமாகியும் இருப்பவனே என்று உரை காண்பது இங்கு மரபாக மாட்டாது.

(1) வடிவோனே! (2) கதிர்காமம் உடையோனே! (3) மயிலோனே! (4) பெருமாளே! (5) இனிமையுமாகி வருவோனே என (5) முறை கூவி, பெரிய உலகில், மிகச் சிறியேன் நெருக்குண்ணுது வாழ வேணுமே! அதைத் திருவுளம் கொண்டு, முருகா! என் முன் ஓடி நீ வர வேணுமே என்று பிரார்த்தித்தபடி.

வாழ்க திருப்புகழ்!

---

# ஆசையும் அகந்தையும்

(ஆ. கி. ரங்கராஜன்)

"ஆசை வெட்கமறியாது." அது துக்கமும் அறியாது. ஆனால் அதில் அகப்பட்டவர்களின் கதி அதோகதி தான். அது எல்லையற்ற பெரும் சூருவளியைப் போன்றதாகும். ஆசையின் வசப்பட்டவர்கள் தமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட, எதையும் பிரித்துணரும் பகுத்தறிவாம் ஆறுவது அறிவை இழப்பர். அப்போதுதான் அவர்களைப் பற்றிய ஆசைப் புயலுடன் அகந்தை எனும் அக்கினி சேர்ந்து கொள்ளும். அவ்விரண்டும் கூடி அவர்களை அழித்துவிடும். இது நல்வினை, இது தீவினை என்று அறியும் சக்திவாய்ந்த பகுத்தறிவுடைய மானிடன் ஆசையினாலும் அகந்தையினாலுமே அக்காலத்தில் அறிவுறுகிறான். இதற்கு இராவணன் ஓர் எடுத்துக்காட்டு.

இலங்காதிபனாகிய தசக்ரீவன் மாபெரும் சிவ பக்தன். நாரணனையும் அவன் உயர்வாகவே மதித்தான். தனது

---

என்னுளே இருந்தெல்லாமாய் எதுவும்செய் ஒருவனன்றி
மன்னும் பிறவனைத்தும் மறக்கும்நாள் எந்நாளோ.

இராஜ்யத்தார் எவரும் சிறிதும் அல்லலுறாத வண்ணம் எங்கிலும் மருத்துவ விடுதிகளும் போஜனசாலைகளும் உல்லாச வனங்களும் அமைத்தான். அவனது இராஜ்யத்தினைப் பொறுத்தவரை எங்கும் வறுமையோ பிணியோ வேறுவித அல்லல்களோ எதுவுமின்றி எவரும் வாழ்க்கை நடத்தினர். அவனது சகோதரர்களும் அமைச்சர்களும் அளவு கடந்த அறிவு படைத்தோர். அவனது சைன்யம் சாகரம் போன்றது.

இத்தகைய இலங்கேசன் இராம பாணத்தினால் ஏன் அழிய வேண்டும்? இதற்குக் காரணம் அவன் கொண்டிருந்த ஆசையும் அகந்தையுமேயாம். நதியைக் கடக்கப் படகை அளித்தால் நதி செல்லும் வழியே சென்று அலை கடலில் அமிழ்வாரைப் போன்று,பகுத்தறிவை அக்ரம வழியில் திருப்பினான். அது பின் வருமாறு:

1. பூத உடல் எடுத்த யாவரும் அழிந்தே தீர வேண்டும். 'ஆனால் எதிரிலாத வலிமையைப் பெற்று எண்ணற்ற நாள் வாழலாம்.'

2. '(ஆராய்ச்சி) அஷ்ட திக்குகளையும் அகில உலகினையும் அடக்கி ஆள வழி யாது? அளவு கடந்த தபோ பலமும் அதனால் கிடைக்கும் வர பலமும் கொண்டு அக்காரியத்தைச் செய்யலாம்'.

3. (தீர்மானம்) 'தவம் செய்வதன் மூலம் இறைவனையும் வசப்படுத்திக் கொள்ளலாம்.'

இவ்விதமாக இராவணன் பகுத்தறிவுப் புரவியை அநீதி வழியில் தூண்டி விட்டான். அவ்வாறே தவம் புரிந்து இறைவனிடம் பல வரங்களும் ஆயுதங்களும்பெற்று அமரரையும் அஷ்ட திசைகளையும் வென்று தனக்குக் குற்றேவல் செய்யக் கட்டளையிட்டான்.

மதியும் ரவியும் கூட இலங்கேசனைக் கண்டு அஞ்சினர். இது ஆசையின் விளைவு அன்றோ? அதோடு அகந்தையும் கூடியதால் அனைத்திற்கும் தானே அரசனெனக் கருதித் தோற்ற எவரையும் துன்பத்தில் ஆழ்த்தினன். அவனது ஆசை கட்டுமீறியது. அதனால் கணவன் வழி நிற்கும் காரிகையரையும் கவர்ந்தனன். அவ்வாறு அவன் கவர்ந்த வனி

---

நினைப்பொடு மறப்புமாகி நிலைத்தேநில் லாத
மனத்தொழில் மாயந்தன்னை மாய்க்கும்நாள் எந்நாளோ.

தையரில் ஒருத்தியே ரகுநந்தனனின் ரமணியாம் ஜானகி தேவி.

இவ்விடத்தே நாம் தெய்வப் புலவராம் வள்ளுவனுர் நமக்கு எடுத்துக் கூறியுள்ள புத்திமதியை ஆராய்வோம்.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை.

—(திருக்குறள்.)

தன்னைத் தானே புகழ்தலால் அகந்தை மிகும் என்பதும், அதன் பின் மற்றவர்க்கும் தனக்கும் நன்மைதராத செயல்களைப் புரியும் ஆசையை அகந்தை தூண்டிவிடும் என்பதும், அதனுல் அழிவுற நேரும் என்பதும் இக்குறளின் மூலம் தெள்ளென வள்ளுவர் நமக்கு விளக்கி எச்சரிக்கை செய்கிருர்.

ஆராயுமிடத்து இராவணன் கார்த்த-வீரியார் ஜுனனை எதிர்த்ததும், கைலையைப் பெயர்த்ததும், குபேரனது புஷ்பகத்தைப் பறித்ததும், வாலியைப் பகைத்ததும், சீதையைக் கவர்ந்ததும், இதுபோன்ற பல செயல்களும் புரிந்தது அவனுக்கோ மற்றவர்க்கோ நன்றி பயவா வினைகளன்ருே?

வள்ளலாகிய ஸ்ரீமான் கொடிய இராக்கதப் படைகளைக் கண்டு எவ்வாறு அவற்றை அழிப்பதென யோசித்துப் பின், இலக்குமணன் கைகேயியின் மீது ஆத்திரம் கொண்டிருந்தாஞதலால் அதை நீக்க எண்ணி, அவன் அறியுமாறு, "என் அன்னையினும் அன்புடைய கைகேயி கபடமற்ற காரிகை என்பது உண்மையாயின், தர்மமே நிலை நிற்கும் என்பது உண்மையாயின், நான் விடும் இந்த பாணம் இந்த அசுரசேனைப் பெருங்கடலை நாசமாக்க வேண்டுமென உரைத்து ஓர் எரிசரம் எய்தனன். சிறிது நேரத்திற்குள் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்தன. வெகுண்டு எதிர்த்த இராவணனும் ஆயுதமும் ஆற்றலும் இழந்து தவித்தான்; திகைத்தான்.

இராகவன் அப்போது கருதியதாவது; தசமுகன் சரணடைந்து விட்டால் மீண்டும் இலங்கையை அவனுக்கு அளிக்க இயலாது. அது தன் வாக்குறுதிப்படி விபீஷணன் உரிமையாகும். எனினும் அவன் பெரும் வள்ளல். அதற்

---

மெய்யொடு மெய்கலந்து விளக்கொளி ஒத்ததென்ன
ஐயன் ஆனந்தத்(து) அழுந்துநாள் எந்நாளோ.

கேற்ப அவனுக்கு மாபெரும் நாடு ஒன்று உள்ளது. அதுவே கோசல நாடு. தென்னையும் கமுகும் செறிந்த சோலைகளும், பெரிய வாளை எனும் மீன்கள் துள்ளி ஓடும் சரயு நதியும் அருவிகளும் கொண்டு பஞ்சம், பயம், பிணி முதலியன இன்றி செழித்து விளங்கும் நாடு. அது இன்று பரதனின் வசமிருப்பினும் தான் வனவாச முடித்துத் திரும்பினால் அந்நாடு தன்னைச் சேரும். அப்போது அந்நாட்டை அவனுக்கு அளித்து விடலாமென அச்சுதன் எண்ணி, "அசுரேந்திர! ஆசையாலும் அகந்தையாலும் துணுக்குற்று அநீதி புரியத் தலைப்பட்டாய். உனக்கு அரசாள இனி என்ன உளது? உனது சேனை சூறுவளியில் சிதறுண்ட பூளைப் பூண்டுபோல் அழிந்தன. ஆயினும் போர் புரிய எண்ணமிருப்பின் நாளைவா!" எனத் தந்திரமாகவும் விகடமாகவும் இன்சொல் கூறினன். இதைக் கம்பனின் வாயிலாக அறிகிறோம்.

"ஆள யா உனக்(கு) அமைந்தன?
மாருதம் அறைந்த
பூளை ஆயின; எனினும் நீ
இன்று போய் போர்க்கு
நாளை வா!" என நல்கினன்
நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல
நாடுடை வள்ளல்"

காகுஸ்தன் இலங்கேசனைத் திருத்த முயன்றான், அறிவு புகட்டினான். இராவணன் தன் குற்றமுணர்ந்தான். ஆனால் அவனது பகுத்தறிவு ஆரம்பத்திலேயே பழுதுபட்டு விட்டபடியால் முதற் கோணல் முற்றும் கோணல் என்றவாறு பகைவனிடம் சரணடைவதைவிட புகழுடன் அழிவது மேலெனக் கருதித் தனது சேனைகளையும், ஆயுதங்களையும், பெற்ற வரங்களையும் சமர்பூமியில் தசரத குமாரனின் கொடும் கணைகளுக்கு இரையாக்கித் தானும் வீழ்ச்சி அடைந்தான்.

சமீப காலத்தில் நடைபெற்ற இரண்டாவது உலக மகா யுத்தத்தின் காரணமே ஆசையும் அகந்தையும்தான்

---

கையினில் வெண்ணெயுள கலங்காமல் நெய்க்கின்னம்
பைய உருக்கியதைப் பருகும்நாள் எந்நாளோ.

என்பதை உலகினர் அறிவர். விசித்ர விநோதமான ஆனால் மிகவும் பயங்கர ஆயுதங்களையும் முறைகளையும் கையாண்டு அவனியை ஆக்ரமிக்கக் கருதிய ஜெர்மனிநாட்டின் சர்வாதிகாரியாம் ஹிட்லர் எல்லையற்ற அறிவு படைத்திருந்தும், ஆசையினால், வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் தோன்றுவான் என்ற உண்மையை மறந்து, காலம் மாறும் என்பதையும் கவனியாது, தனது பகைவர்களின் வசம் இறுதியில் தன் நாட்டைப் பறிகொடுத்து சேனைகளையும் கரம் நழுவ விட்டுத் தானும் புவியினின்று மறைந்தார்.

'விஞ்ஞானியும்' சிறந்த மெய்ஞ்ஞானியுமாகிய தாயுமானர் ஆசையையும் அகந்தையையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" ஆங்காரமென்னும் மதயானை வாயிற் கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ?"

" ஆசை எனும் பெருங்காற்றூ டிலவம் பஞ்செனவு
மன தலையும் காலம்
மோசம் வரும் இதனாலே கற்றதுங் கேட்டதும்
தூர்ந்து முத்திக்கான
நேசமும் நல்வாசமும் போய்ப் புலன்நாயின்
கொடுமைபற்றி நிற்பர்! அந்தோ!
தேசு பழுத்து அருள் பழுத்த பராபரமே! நிராசை
யின்றேல் தெய்வமுண்டோ?"

" ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
ஆணவத்தினும் வலிதுகாண்!
அறிவினை மயக்கிடும் நடுவறிய வொட்டாது,
யாதொன்று தொடினும் அதுவாய்
தாங்காது மொழிபேசும், அரியர ப்ரம்மாதி
தன்னொடு சமானமென்னும்
தடையற்ற தேரில் அஞ்சுருவாணி போலவே
தன்னில் அசையாது நிற்கும்;
'ஈங்கார் எனக்கு நிகர்?' என்னப்ர தாபித்து
இராவணா காரமாகி
இதயவெளி எங்கணும் தன்னரசு நாடுசெய்து
இருக்கும்; இதனொடெனேரமும்

---

சித்தித்த நவநீதத்தை சிவஞானக் கனல்முன் காட்டிப்
புத்துருக் கினநெய் யாக்கிப் புசிக்குநாள் எந்நாளோ.

வாங்காவிலா அடிமை போராட முடியுமோ?
மௌனஜெப தேச குருவே!
மந்த்ர குருவே! யோக தந்த்ர குருவே! மூலன்
மரபில் வரும்மௌன குருவே!"

அருட்ஜோதி வள்ளார் கூறுவது:

ஞானமணிப் பொது நடஞ்செய் திருவடி கண்டிடவே
நடக்கின்றேன் அந்தோ! முன் நடந்தவழி அறியேன்
ஊனமிகும் ஆணவமாம் பாவி எதிர்ப்படுமோ?
உடைமை எல்லாம் பறித்திடுமோ? நடைமெலிந்து
போமோ?
ஈனமுறும் அகங்காரப் புலிகுறுக்கே வருமோ?
இச்சை எனும் இராக்கதப் பேய் எனைப்பிடித்துக்
கொளுமோ
ஆனமலத் தடை நீக்க அருள் துணைதா னுறுமோ?
ஐயர் திரு வுளமெதுவோ? யாதுமறிந் திலனே!

ஆசையும் அகந்தையும் மானிடனின் ஆவியைக் குடிக்கும் கொடுமையன. அவை அவனது அறிவை மயக்கி அழிவுப் பாதையிலேயே அவனை இழுத்துச் செல்லும். அகந்தை என்பது இருட்டாகும். அதற்கெனவே தாயுமானார் அதை இராவணாகாரம் என்றார். இராவணம்=இரவின் வடிவம் அதாவது இருண்ட வடிவம். எப்படி வைத்துக்கொண்டாலும் அவைகளால் மானிடனுக்குத் தீங்கேயன்றி வேறல்ல. இறைவனின் திருவருள் மானிடனை நல்வழிப் படுத்திக் காத்தருளுமாக!

---

<u>கட்டுரை-3</u>

# கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

**கடமையும் தர்மமும்:**

உலகத்தில் அதர்மம் மேலோங்கி அக்கிரமங்கள் பரவிப் பெருகும் காலத்தில் பகவான் அவதரித்து தர்

---

ஆணையில் அடங்கிநில்லா அஞ்ஞானக் களங்ககன்று
சாணையின் மணிபோல் நெஞ்சம் தழைக்கும்நாள் எந்நாளோ.

மத்தை நிலை நிறுத்துவதாக கீதை கூறுகிறது. சாதாரண மாக எது தர்மம் எது அதர்மம் என்று நிர்ணயிப்பதற்கு நமது அறிவு போதுமானதல்ல. ஒருவர்க்கு தர்மம் என்று தோன்றுவது மற்றவர்க்கு அதர்மமாக தோற்றப்படலாம். ஆழ்மையான சிந்தனையுடன் தனக்கென்று உறுதியானதொரு இலட்சியப் பாதையில் சென்று கொண்டிருப்பவர்களுக்கே தர்மாதர்ம ஞானம் ஏற்படும். மேலான இலட்சியத்தை உடையவர்கள் தங்கள் இலட்சிய சித்திக்கான மார்க்கங் கள் அனைத்தையும் தர்மமாகவும் அதற்கு மாறானவற்றை யெல்லாம் அதர்மமாகவும் கொள்வர்.

உலகியல் ரீதியில் ஆராய்ந்தால் ஒரு மகானுடைய தர்மத்திற்கும் ஒரு கொள்ளைக்காரனுடைய தர்மத்திற்கும் வித்தியாசம் உண்டல்லவா?

ஒருவனுடைய சொந்த விருப்பு வெறுப்புகளை அனு சரித்து அவன் தனக்கென்று ஒரு தர்மத்தை ஆசிரயிக் கிறான். அந்த தர்மத்தை யொட்டிய அவனுடைய அன்றாட செயல்கள் அவனுடைய கடமைகளாக அமைகின்றன. தர்மத்தை ஆசிரயிப்பதற்கான செயல்களையே பொதுவாக நாம் கடமைகள் என்று கொள்ளலாம்.

சில சமயங்களில் கடமைகள் தர்மத்தை மீறி விடுவ துண்டு. தர்மத்திற்காக கடமைகளை புறக்கணிக்க வேண் டிய அவசியமும் ஏற்படலாம். உதாரணமாக வதை செய் யக் கூடாது என்பது பொதுவான தர்மக் கோட்பாடு. ஆனால் தர்மத்தை நிலைநிறுத்த துஷ்டர்களை சம்ஹாரம செய்ய வேண்டியிருக்கிறது—அல்லது தண்டிக்க வேண்டி யிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் 'துஷ்ட நிக்ரஹம்' என்ற தர்மமானது 'அஹிம்சா பரமோ தர்மஹ' என்ற தர்மத்தை மீறி விடுகிறது. இங்கு தர்மத்திற்கும் கடமைக்கும் ஒரு பெரிய போராட்டமே ஏற்பட்டு விடுகிறது. பாரதப் போரில் அர்ஜுனனுக்கு இம்மாதிரியான தர்ம சங்கடமும் பெருத்த குழப்பமும் ஏற்பட்டது. அதை நீக்கும் சாதன மாகவே கீதை தோன்றியது.

---

கறைபெறும் உள்ளத்துற்ற களிம்புகள் அகன்று நன்றாய் அறைவைத்த தங்கம் போலும் ஆகும்நாள் எந்நாளோ.

கீதை காட்டும் தர்மம் மிகவும் தெளிவானது. அங்கு தனி நபருக்கான பிரச்னையோ அல்லது தர்மமோ கிடை யாது. கீதையின் தர்மம் எல்லோருக்கும் எக்காலத்திற்கும் ஏற்றது. மாறுதல்களுக்கு அவசியமில்லாதது. ஆனால் என்றும் மாறுதல்களுக்கு உட்பட்டது! பாரதப் போரும் கீதா போதனையும் கிருஷ்ணார்ஜுனர்களுக்கு மட்டும் உரித் தானவை யல்ல. அகில உலகத்திற்கும் எக்காலத்திற்கும் உரிமையானவை.

தர்மத்திற்காக தர்மத்தையே கொல்லலாம்' என்று கீதை மட்டும் தான் கூறுகிறது. இந்த தத்துவ தரிசிகளுக்கு மட்டுமே முடியும். இந்த தத்துவத்தின்படி பார்த்தால் பாரதம் ஒரு யுத்தமல்ல. அங்கு நிகழ்ந்தது கொலையே அல்ல என்று புரியும்.

நாயைத் தடவிக் கொடுத்து நன்ருகப் போஷித்து வளர்க்கலாம். பூனையின் வளர்ப்பில் கவனமும் கட்டுப் பாடும் தேவை. தேளின் கொடுக்கை மட்டும் நறுக்கி விட்டு விடலாம். ஆனால் நல்ல பாம்பைக் கொன்றே தீர வேண்டும். இச் செயலில் எதுவுமே ஜீவஹிம்சை யாகாது என்று உங்களால் எப்போது திடமாகவும் தெளிவாகவும் சந்தேகத்திற்கிடமின்றியும் நம்ப முடிகிறதோ அப் பொழுதான் கீதை காட்டும் பாதையில் நீங்கள் பயமின்றி செல்ல முடியும்!

எது தர்மம் என்பது குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் சம்பந்தப்படும் பாத்திரங்களின் தன்மையையும் தரத்தை யும் பொறுத்து தீர்மானிக்க வேண்டிய விஷயமாகும்—இது வும் சரியல்ல!

தர்மம் என்பது காலத்தாலோ, தேசத்தாலோ, பாத் திரத்தாலோ கட்டுப்படக் கூடியதல்ல. ஆனால் மாறு தலுக்கு மட்டுமே ஏற்றது. அதாவது வளைந்து கொடுக்கக் கூடியது. அம்மாதிரி வளைந்து கொடுக்கக்கூடிய நெளிவு கள் தர்மத்தை அனுசரித்த கடமைகள் ஆகும். கடமைகள் மாறலாமே தவிர தர்மம் மாறுவதில்லை. கடமை மாற்றத்தை

---

**மண்மயக் கலக்கநீரை மாற்று தேற்றும் பரல்போல்**
**சின்மயம் விளங்கிசித்தம் தெளியும் நாள் எந்நாளோ.**

நாம் தர்மத்தின் மாற்றம் என்று கருதி விடுவதால் தான் குழப்பம் ஏற்படுகிறது. அஹிம்சை ஒரு மேலான தர்மம். ஆனால் துஷ்ட நிக்ரஹம் என்பது தர்மத்தை அனுசரித்த கடமையேயாகும்.

உண்மையே பேச வேண்டும் என்பது தர்மம். ஆனால் உண்மையை நிலைக்க வைக்க பொய் சொல்லவேண்டி வரும் போது அப்படிச் செய்வது கடமையாகும். தர்மம் கொள்கைகளின் தொகுதி என்று கொள்ளப்பட்டால் கடமையை செயல்களின் தொகுதி என்று கொள்ளலாம்.

மேலான லட்சியத்தோடு செய்யப்படும் எல்லாச் செயல்களும் தர்மத்திற்குப் புறம்பானவையல்ல. செயலைக் கொண்டு நாம் தர்மத்தை மதிப்பிடக் கூடாது. செயலுக்கு அடிப்படையான நோக்கத்தைக் கொண்டே மதிப்பிட வேண்டும்.

மேலான நோக்கமுடைய ஒரு கொலை ஜீவ வதையாகாது! அது மட்டுமா? அது அஹிம்சைக்கான செயலேயாகும்.

ஆனால் இம் மாதிரியான தர்மத்தை ஆசிரயிப்பதற்கான பாத்திரம் யார்? பாச பந்தங்களுக்குக் கட்டுப்பட்ட பாமரனுக்கு இந்த வழி ஏற்றதாகுமா? இல்லை, பகவான் கண்ணன் போன்றவர்களுக்கு மட்டுமே ஏற்றது. சும்மாயிருக்கின்ற திறம் படைத்தவர்கள்தான் கர்மம் செய்வதற்கு ஏற்றவர்கள். மரணத்திற்கு பயப்படாதவர்கள்தான் வாழ்வதற்குத் தகுதி வாய்ந்தவர்கள்.

மௌனத்தின் பெருமையை உணர்ந்தவர்கள் தான் உபதேசம் செய்வதற்கு உரித்தானவர்கள்

கடமைகள் நாம் கடைப் பிடிப்பவையாக இருக்கக் கூடாது. அவை தாமே இயற்கையாக நிகழ வேண்டும். நமது ரத்தத்தில் தர்மம் ஊறியிருந்தால் அதை அனுசரித்த கடமைகள் தாமே செயல்களாக வெளிப்படும். சந்தேகத்திற்கே இடமிருக்காது. இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில்

---

கன்மஷம் அகன்றுநல்லோர் காணுமெய்ப் பொருளையானும்
நின்மல மாகிக்கண்டு நிற்குநாள் எந்நாளோ.

தர்மம் வேறு—அதை அனுசரித்த கடமைகள் வேறு என்று கூட நாம் கருத வேண்டியதில்லை.

கிருஷ்ணன் பேசினான் என்றால் தர்மம் பேசியது என்று அர்த்தம். அவன் செயல்கள் அனைத்தும் தர்மத்தின் வெளிப்பாடுகள் தான். அவன் கொன்றாலென்ன? அணைத்து வளர்த்தாலென்ன? இரண்டும் ஒன்று தான். அவன் ஆக்குவது, அழிப்பது எல்லாமே தர்மத்தை நிலை நிறுத்துவதற்குத் தான். தர்மத்திற்காக துரியோதனாதியர்கள் தாமே அழிந்தார்கள் என்று கூறுவதுகூட பொருந்தும்! (தொடரும்)

---

# கொள்வோர் குறிப்பால் குற்றமும் குணமாம்

(T. H. விவேகாநந்தம் பிள்ளை, B.A., B.T.)

"நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக்கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை' சூழ்திருப் புன்கூ ருளானே"

—ஆரூரர்.

---

எழில்சுடர் பரமன் தன்னை இரண்டறக் கலந்தென்னுள்ளம் முழுசுடர்ப் பொருளா யின்பம் முழுக்குநாள் எந்நாளோ.

இத்திருப்பாட்டு நால்வரில் ஒருவராம் நம்பியாரூ ரால் பாடியருளப்பட்ட நற்றமிழ்த் திறமையாகும். இதன் கண் குறிக்கப்பட்ட மெய்யடியார்கள் எண்மராவார். அவர்கள் திருவருள் வயப்பட்டு ஒழுகிய செம்மலாராவர். அவர்கள் திருவருளின் தூண்டுதல் வாயிலாக உலகோர் உய்யச் சில பல அருஞ் செயல்களை நிகழ்த்தி யுள்ளார்கள். அவையனைத்தும் சிவபெருமானின் திருவருட் பெருமை யினையே குறிப்பினவாகும்.

அச் செயல்கள் உலகோர் பார்வைக்குக் குற்றம்போல் தோன்றுவனவாகும். ஆயினும் அவர்கள் ஏனையோர் போன்று ஆணவமாகிய இருள் முனைப்பால் செய்தவ ரல்லர். அருள் முனைப்பால் செய்த மெய்யன்பராவர். அதனால் அச் செயல்கள் செய்யப்பட்டார்க்கும் செய்த தமக்கும் நற்பயனையே நல்கி நயனுடைய நற்புண்ணிய மாயிற்று. அதனால் அவை முழு முதல் சிவனால் குண மெனக் கொள்ளப்பட்டன.

ஒரு செயலைக் குணமென்றோ குற்றமென்றோ உலகோர் கூறுவது பெரும்பாலும் செயன் முறையினைக் கொண்டு தான். ஆனால் உண்மையதுவாகாது. செய்வோர் கருத்து முறையைக் கொண்டு தான் அங்ஙனம் கூறுதல் வேண்டும். மேலும் அச் செயலின் விளைவாகிய பயன் நன்மையா? தீமையா? என்பவற்றைக் கொண்டும் கூறுதல் வேண்டும். அப்பயன் செய்தார்க்கா? செய்யப்பட்டார்க்கா? பிறர்க்கா? என்பதனையும் கருதுதல் வேண்டும். மேலும் செய்தார் கருத்தாவா? கருவியா? என்பதனையும் நமக்குள் உன்னித்தல் வேண்டும். இவற்றையெல்லாம் விடுத்து வாளா தோற்றத் தளவால் செயற்கும் பெயர் கூறுவது செம்மையாகாது.

இத்திருப்பாட்டில் 'குணமெனக் கொள்ளுதல்' செய் யப்பட்டார்க்கு அதனால் குணம் நிகழ்ந்தமையாகும். மெய்யன்பு சேர்ந்த மருத்துவன் நோயாளியின் நன்மையின் பொருட்டு வாளால் அறுத்துச் சுட்டுத் துன்புறுத்தினும் அவையனைத்தும் குணமேயன்றிக் குற்றமாமோ! நோயாளி யும் அம்மருத்துவன் பால் மாளாத மெய்க்காதல் கொண்டு

---

**வெய்யவன் தன்னைக்கண்டு விகசிக்கும் கமலம்போல்என் மெய்யனைக் கண்டேஉள்ளம் விரியும்நாள் எந்நாளோ.**

ஒழுகவும் காண்கின்றோம். ஆனால் அச்செயல் தோற்றத்தில் தரும் துன்பத்தினை நோக்கிக் குற்றமெனக் கூறுவதா? ஈற்றில் பயக்கும் ஈடிலா நலத்தினை நோக்கிக் குணமெனக் கூறுவதா? கூர்ந்து நோக்கிக் கூறுமின்.

இனித் திருப்பாட்டின் கண்ணுள்ள திருவருள் நிகழ்ச்சியினை இந்நிலையினின்றும் சிறிது ஆராய்வோம்.

1. 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்'. இவர் நால்வருள் முதல்வராம் நல்லாராவர். இவரால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றம், சமணர் கழுவேற நேர்ந்த காலத்துப் பாண்டியன் கூறிய அறமுறை மொழி கேட்டும் விலக்காதிருந்தது என்பம். இது குற்றமன்று குணமேயாம் என ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரே சிவமாய் வாழ்ந்த சேக்கிழார் அடிகளால் பன்னிரண்டாந் திருமுறைக் கண் பாங்குற மொழிந்தருளப்பட்டது. அத்திருப்பாட்டு வருமாறு.

> 'புகலியில் வந்த ஞானப் புங்கவர் அதனைக் கேட்டும்
> இகலிலர் எனினும் சைவர் இருந்து வாழ் மடத்தில் தீது
> தகவிலாச் சமணர் செய்த தன்மையால் சாலும் எனறே
> மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை''
>
> —12 சம்பந்தர்—854.

பாண்டியன் செய்த அருமுறையால் சமணர்களுக்கு உடல் நீக்கமாகிய ஊறு நேரினும், அவர் தம் உயிர் மீளா நரகிற் கிடந்து மாளாத் துன்பம பல்லூழி எய்தும் பாவத்தினின்றும் விடுவித்து உயிர்க்கு ஊறு நேரா வண்ணம் செய்த பேறு பெரிதாம் என்க. மேலும் அவ்வமணர்கள் சைவர் வாழ் மடத்தில் தீக்கொளுத்திய பெரும் பாவமே கருத்தாவாக நின்று ஆற்றலாற் பெரியானாகிய மன்னனைக் கருவியாகக் கொண்டு அம்முறையினை நிகழ்த்துவித்த தென்க. இவ்வுண்மை,

> ''பெரியாரைப் பேணுது ஒழுகின் பெரியாரால்
> பேரா இடும்பை தரும்.'' —திருக்குறள்.

என்னும் திருவள்ளுவ நாயனார் திருமொழியான் உணரலாம். ஞான சம்பந்தப் பெருமானார்க்குச் சமணரை ஒழித்

---

**சிறந்ததோர் ஒருவன்பால்முன் சீரிய காளகூடம்**
**மறைந்தபோல் துன்பமெல்லாம் மாறுநாள் எந்நாளோ.**

துக் கட்டுவதே திருவுள்ளமாயின், "பையவே சென்று பாண்டியற்காகவே" என்ற திருவருண்மொழி, "வெப்பவே சென்று அமணரை வீழ்த்தவே" என்று அமைந்திருக்கும். அஃதன்று திருவுள்ளம். அற்முறை செய்யவேண்டும் எனபதேயாம். மதியிலா அமணர் கொளுவுஞ் சுடர்க்கு மன்னவுன் உடந்தை குற்றத்தனுவன். அந்த முறையில் அவ்வெப்பம் உடலுறு பிணியாய்ப் பையச் சென்று மணி மந்திர மருந்தின் மேலாய், அவை செய்யும் பயனையும் செய்வதாய் அமைந்த திரு வெண்ணீற்றால் நீங்கியது. அத்தீக் கொளுவும் குற்றத்திற்கே பொறுப்பு முதல்வராயுள்ள அமணரை அவ்வெப்பு, பாண்டியன் வாயிலாகக் கழுவேற்றுவிக்கும்படி செய்தது. அம்மட்டோ! அமணர் "பொங்கிய வெகுளி கூரப் பொருமை காரணமேயாகத் தங்கள் வாய் சோர்ந்து தாமே தனி வாதில் அழிந்தோமாகில் வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே" என்று ஒட்டுரைக்கும்படியாகவும் செய்தது.

குறற நீ குணங்கள் நீ கூடலால வாயிலாய்
சுற்ற நீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ அருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்து முன்னுரைப்ப தென் முகம்மனே"

2. நாவினுக்கு அரையன்.

இவர் நால்வருள் ஒருவர். ஆளுடைய பிள்ளையாருடன் ஒருகாலத்து ஒருங்கிருந்த ஒண்மையர்; அவரால் அப்பரென்னும் ஒப்பில் திருப்பெயர் சூட்டப் பெற்றவர். பிள்ளையார் சிவிகையினைத் தாங்கி வரும் வீள்ளரிய பேறு பெற்றவர். இவர் சமணராக இருந்தபோது சிவபெருமானை அச்சமண் சார்பாக நின்றுபண்டு இகழ்ந்தனர். அக்குற்றத்தின் மெய்ம்மையுணர்ந்து 'பண்டு நான் இகழ்ந்தவாறே' என்று திருப்பதிகம் பாடி வருந்தினமையால் அக்குற்றம் குணமாயிற்றென்க. என்னை, பிழை பொறுக்கும் பெற்றியன் பெண்ணொரு கூறன் என்பதை உலகிற்கு உணர்த்தலாலென்க.

"ஒரு பிறப்பி லானடியை உணர்ந்துங் காணார்
உயாகதிக்கு வழிதேடிப் போக மாட்டார்

---

எதிர்த்தொரு பாலன் இறப்பொழிந்தான் யானும்
மதிதே எமன்பயம்போய் மகிழும்நாள் எந்நாளோ.

வருபிறப்பொன் றுணராது மாசு பூசி
வழிகாணு தவர்போல்வார் மனத்தனுகி
அருபிறப்பை அறுப்பிக்கும் அதிகையூரன்
அம்மான்றன் அடியிணையே அணைந்து வாழாது
இருபிறப்பும் வெறுவியராய் இருந்தாற் சொற்கேட்டு
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே.''

—அப்பர்6 3-5

### 3. நாளைப் போவான்

இவர் திருப்புன்கூர்ச் சிவலோகமுடையவர் திருமுன் வீற்றிருக்கும் திருநந்தியைக் கண்டு, அவரைப்போல்தானும் சிவபெருமான் திருமுன் நேராக வீற்றிருந்து கும்பிட வேண்டும் என நினைந்தார். அதனுல் சிவபெருமான் திருநந்தியைச் சற்று விலகி இருக்கும்படி திருவருள் புரிந்தனன். பெருமான் ஒருவர்க்கு அருளியுள்ள சிறப்பிடத்தை எங்குமிலாத முறையில் மாற்றுவிக்க நேர்ந்தமை குற்றமாம்.

''சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் என நினைந்தார்க்கது நேர்வார்
காரேறும் எயில் புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கவருள புரிந்தருளிப் புலப்படுத்தார்''

—12; திருநாளைப் போவார். 17.

### 4. கற்ற சூதன்

களவு பொய் காமங் கோபம் முதலிய குற்றங் காய்ந்தாரே உளமலி யன்புசால் திருத்தொண்டராவர். உலகத்தாராலும், சமயத்தாராலும் விலக்கப்பட்ட சூதினை மேற்கொண்டது குற்றம். என்னை,

''இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு'' திருக்குறள்.

எனத் திருவள்ளுவ நாயனுரும் திருவாய் மலர்ந்தருளினுர். ஆதலினு லென்க. அதன்மேல் பெருங்கோபத்துக்குள்ளாகிச் சூதில் ஓட்டித் தோற்றவர்பால் சிறிதும் இரக்கமின்றிச் சுரிகை உருவிக் குத்துதல் முறையாமா?

---

கள்ளப் பிறவிவஞ்சக் கடலின் கரைதாண்டி
உள்ளத் துறைபொருளோ(டு) ஒத்திருப்ப தெந்நாளோ.

"முற்சூது தாந்தோற்று முதற்பணய மவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும் வென்று பெரும் பொருளாக்கிச்
சொற்சூதால் மறுத்தாரைச் சுரிகைஉரு விக்குத்தி
நற்சூதர் மூர்க்கர் எனும் பெயர் பெற்றார் நானிலத்தில்"

—12. மூர்க்கர்-9.

இதன்கண் தோற்றவர்பால் ஏற்படும் சொற்குற்றம் போக்கப் படுவது அவர்தம் உயிர்க்கு நன்மையாகும். மேலும் உலகோர்க்குச் சூதால் நேர்வது திருவாகிய உடைமை நீங்குவது மட்டுமன்றி, உருவாகிய உடலிலும் ஊறுண்டாகும் என்னும் உண்மை உணர்த்தப்படுவதாகும்.

5. நற்சாக்கியன்.

இவர் சிவபெருமான் மீது கல்லெறிந்து வழிபட்டனர். கல்லெறிதல் குற்றமே எனினும் தெய்வத் திருக்குறிப்பு எனக் கொண்டு விடாமற் செய்தது குணமேயாம். மணி முதலிய கற்களிழைத்த அணியினை அணிவிப்பார். அதன்கண் காணப்படும் கல் மலரினும் பளுவுடையதென்று எண்ணுவதில்லையே. அம்மணி மாலையினை மாலை எனவேயன்றோ கருதுகின்றனர் அம்முறையில் சிவபெருமான் திருவுளத்தில் உலகோர் உயர்வென மதிக்கும் ஒளியுள்ள கல்லும், அஃதென்றென மதிக்கும் ஒளியில்லாத கல்லும் ஒன்றேயாம்-நன்றேயாம் என்னும் குறிப்பும் புலனுவதாகும். இதில் கடவுட் படைப்பில் ஒரு பொருளையும் தாழ்வு படுத்துதல் குற்றமாமென்னும் தன்மையும் புலனாகும்.

"அக நிறைந்த பேருவகை அடங்காத ஆதரவால்
மகவுமகிழ்ந் துவப்பார்கள வன்மைபுரி செயலினால்
இகழ்வனவே செய்தாலும் இளம் புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு நீள்சடையார் தாம் மகிழ்வார்"

—12. சாக்கியர், 10

6. சிலந்தி.

திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தடியில் வீற்றிருக்கும் பெண்ணொரு கூறனும் சிவபெருமானின்

---

தள்ளற் கரியவினை சார்மாயைக் காரிருள்போய்
உள்ளத் தொளிகதிரோன் உதித்திடுவது எந்நாளோ.

அருவுருவத் திருமேனியை.முற்பிறப்பில் மக்களினத்திருந்து வழிபட்டுப் பழகிய பழக்கமிகுதியின் காரணமாக, இப் பிறவியில் யானையாகப் பிறந்திருந்தும் நினைவு மாறாது வழிபடுவதாயிற்று. அதுவும் திருவருட் செயலாம். அது போல ஒரு சிலந்தியும் வாயில் நூலால் சருகுதிரா வண்ணம் திருமேற்கட்டி யெனப் பந்தலிழைத்தது. அதனை யானை குற்றமென அழித்தது. அவ்வியானையை அச்சிலந்தி கொன்றது. தானும் உடன் மாண்டது யானை நோன்புத் தொண்டைப் புரிந்தமையால் அதற்குரிய நல்வரம் பெற்றது. சிலந்தி சிலத் தொண்டினைப் புரிந்தமையால் அதற் குரிய திருவரம்பெற்றது. யானை கோச்செங்கணுனுய்ப் பிறந்து யானைபுகாத் திருமாடம் எழுபதின் மேல் எம்பிரா னுர்க்கு எடுத்தது என்பர்.

> "நன்று மிழைதத சிலம்பி வலைப் பரப்பை நாதனடி வணங்கச்
> சென்ற யானை அநுசிதமென் றதனைச் சிதைக்கச் சிலம்பிதான்
> இன்று களிற்றின் கரஞ்சுலவிற் றென்று மீள இழைத்ததனை
> அன்று கழித்த பிற்றைநா ளடல்வெள் ளானை அழித்ததால்"
>
> —12. கோச்செங்கண். 4.

7. கண்ணப்பர்.

இவர் மென்று சுவை கண்ட நன்றும் ஊனினை நம்பர்க்கு அன்பினுல் முகனமனர்ந்த இன்மொழியால் நாளும் ஊட்டினுர். அவ்வூன் கொலையால் வருவது. அதனை உண்பிப்பதால் கொலை செய்யத் தூண்டுவது. இத்தகைய தீர்வில் பெருங்குற்றம் எவரே புரிவர்? கண்ணப்பர் தான் உண்ணுது சிவபெருமானுக்கே யூட்டினமையால் அவ்வூன் சார் உடலில் தங்கிய உயிர்கள் உயர்ந்தன போலும். இஃது அன்பின் நிகழ்ச்சியாதலால், அறிவால் அளவைகளால் ஆய்தல் ஒண்ணுது. அருளால் ஆகமத்தே அறியலாம்.

> "மாமுனிவர் நாள் தோறும் வந்தணைந்து வனவேந்தர்
> தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
> தீமையென அது நீக்கிச் செப்பிய ஆகம விதியால்
> ஆமுறையில் அர்ச்சனைச் செய் தந்நெறியில் ஒழுகுவார்"
>
> 12, கண்ணப்பர், 152.

---

மண்ணுதி வாழ்க்கையினில் மதிமாறிக் கெட்டமனம்
அண்ணு அரசே என்று அன்புறுவது எந்நாளோ.

அ. கணம் புலவர்:

இவர் செல்வமுள்ள காலத்து இருக்கு வேளூரின்கண் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருக்கோவிலுக்கு திரு விளக்கிட்டார். அளவின்றிப் பல நாளும் அன்புடன் புரிந்தமையால் செல்வம் நிறைவுற்றது. பின் தில்லை நகர் வந்து பொருந்தினர். உள்ளன விற்று உவந்து விளக் கெரித்தார். இரந்து திருத்தொண்டு செய்யவும் அஞ்சினர். உடல் முயற்சியால் கணம்புல் அரிந்துகொண்டு வந்து விற்றுப் பணம் பெற்று எண்ணெய் மாறி விளக்கு எரித்தார். ஒருநாள் அப்புல் விலை போகவில்லை. அப்புல் லினையே இட்டு விளக்கெரித்தார், அதுவும் போதாமையால் தம் தலை முடியினை அரிந்திட்டு விளக்கு எரித்தனர். சிவபோக வாழ்வு பெற்று இன்புற்றார். மயிர் கருகிய நாற் றத்தை உயிருள்ளார் தாங்குவது அரிதல்லவா?

"முன்பு திரு விளக்கெரிக்கும் முறையாமம் குறையாமல்
மென்புல்லும் விளக்கெரிக்கப் போதாமை மெய்யான
அன்புபுரி வாரடுத்த விளக்குத்தந் திருமுடியை
என்புருக மடுத்தெரித்தார் இருவினையின் தொடக்கெரித்தார்!"
—12, கணம்புல்லர், 7.

இக்குறிப்புகளை நினைவு கூர வெண்பாக்களால் தரு கின்றோம்.

நன்றென்றும் தீதென்றும் நல்லோர் நவில்வவெலாம்
துன்றும் வினைப்பயனின் துன்பின்பால்—அன்றியும்
செய்வோன் கருவி கருத்தாவா தன்பொருட்டா
செய்தநிலை தேர்ந்துபெயர் செப்பு.

நண்ணார் கழுக்கேட்டல் நாடா நிகழ்த்துரைத்தல்
எண்ணு தகற்றல் எழிலேற்றை—ஒண்ணுத்திச்
சூதாடல் கல்லெறிதல் தூய்மையில்வாய் நூற்பந்தல்
கோதிறைச்சி குஞ்சித்தி கூறு.

எண்பே ரடியாரும் எண்ணாற் கருவியாம்
பெண்பாகன் பேணு கருத்தாவாம்—பண்பா
வினை பயனும் இன்பேயாம் மேவினர்க்கும் வேறு
கனைகணும் நிற்பார்க்கும் காண்.

---

கண்ணுரக் கண்டஎலாம் கனவாகவே மறந்து
நண்ணு திருந்தின்பம் நண்ணுநாள் எந்நாளோ.

தேவி தாஸர்கள் 15-

# ஸ்ரீநிவாசர்

(ஸ்ரீ ரசபதி)

பயனுள சைவம் காத்தது பாண்டி நாடு. மதுர மொழியால், உலகோர் மனத்தைக் கவர்ந்தது மதுரை நகர். அப்பதியில், 64 ஆடல் மூலம், அகிலம் காத்தார் சுந்தரர். ஆட்சி நடத்தி, அரச தருமம் காத்தாள எங்கள் அரசி மீனாட்சி.

இக்குளள பெருமான் ஆலயம் மிகப் பெரியது. மடப்பள்ளி நிர்வாகம் சாமான்யம் அல்ல. இக்குப் பணி செய்வார் பலர். அவர்கட்கு நான் அதிபன். நளபாகமும பீமன் பாகமும் என்னிடம் பிட்சை கேட்க வேண்டும். தெரியுமா?

பலவகை நிவேதன பண்டங்கள், ஒவ்வொரு காலத்தும் உரு வாகும். கடவுளர்க்கு நிவேதனம்; பாமல் ஆலயப் பணியாளர்க் குப் பட்டை சாதம்; இப்படிப் படியளக்கும் பரந்தாமன்போல் இருக்கிறது என் பணி; வெடிபட இப்படி உரைப்பார். விழுந்து விழுந்து சிரிப்பார் ஸ்ரீநிவாசர். ஆம் அதுதான் அவர் பெயர்.

அவாக்கு இன்னும் மணமாகவில்லை. செய்துகொள்ளும் எண்ணமும் பிறக்கவில்லை. தன் பங்கில் கிடைத்தவற்றைத தானே உண்பார். கண் பிதுங்க, நெஞ்சு வீங்க, அவைகளை அவர் விழுங்கும்போது, இவர் சுதத வெகுளி மனிதர் என்று எவரும் சுலபமாகச் சொல்லி விடுவர். வேலையே யில்லாத காட்டு ராஜா வைப் போல, கழுக்கு மொழுக்கென்று இருக்கிறார்.

பொது மகளிர் சிலர், அவர் போக்கைக் கவனித்தனர். அப்பாவி மனிதர் அவரை அணுகினர். கண்ணைக் காட்டினர். அபிநயம் பிடித்தனர். என் ராஜா! மதன ரோஜா நீர்தானே! அது நீர்தானே என்று கையை நீட்டினர்.

என்னமோ போல இருந்தது மனம். பசபச என்று ஊறல் எடுத்தது உடல். ஹி ஹி ஹி ஹி என்று பல்லிளிததார் மடைப் பள்ளிப் பாவலர். பிடித்தது சனி. அன்று முதல் தன் பங்குடன் மிச்சமாகும் பிரஸாதங்கள், அத தையலர் மனைக்குத தாவின.

நியதி கெட்ட திருநடை, வர வர நீடித்தது. அதனால், இரண் டொரு சமயம், அவர்க்கு வயிறு அரைகுறை. ஒரு நாள, வயிறு நிரம்பாமையால், தூக்கம் அன்றிரவு தொலைந்தது. புரண்டு புரண்டு படுத்தார்.

---

**நஞ்சில் உடம்பெடுத்து நல்லாரையும் சதிக்கும்**
**வஞ்சிக் குலமடவார் மயல்ஒழிவ தெந்நாளோ.**

சீ! இது என்ன தொல்லே? என்று ஏங்கினர். மறுநாள் காலை, பகல், மாலை, அர்த்தயாமம்வரை, பழையபடியே வந்து மாதர்கள் வம்பு செய்தனர். மறுபடியும் புத்தி கெடுகிறது. பிரஸாதங்கள் கை மாறுகின்றன. வயிறு காய்கிறது, வருந்துகிறது மனம்.

மறுநாள யோசித்தார். ஒரு முடிவிற்கு வந்தார். தருகிறேன் தருகிறேன் என்று ஏமாற்றினர். அன்றைய பிரஸாதங்களைத் தானே உண்டார். ஒருவரும் அறியாதபடி, இரவில் மறைந்து சென்றார். ஒரு மண்டபத்துள புகுந்தார். மேல் துண்டை விரித்தார். படுத்தார். கண்ணை மூடினர். உடனே கடுமை நித்திரை. உண்பதில் ராஜா. உறக்கத்தில் மன்னன். அவர் பெயர்தான் இப்படிப் பிரசித்தமா யிருக்கிறதே!

* * *

வைதிக வேதியர் ஒருவர். அவர் பரையை உபாசிக்கும் பரம பக்தர். மீனாட்சி சன்னிதிக்கு வந்தார். ஒரு புறத்தில் அமர்ந்தார். காமியார்த்தமான சில பயனைக் கருதினர். இரவும் பகலும், தேவி மந்திரத்தை இடையறாது உருவேற்றி யிருந்தார். இலட்சம் உரு ஏறியது. பட்டப் பகலைப் பழிப்பதுபோல், விண்ணில் முழுமதி விளங்குகிறது.

கல் கல் என்று சப்தித்தது கால் சிலம்பு. ஆடி வந்தாள் ஒரு அணங்கு. கள்ள மனம் கொண்ட அக் காரிகை, தாகம் தீரலாம்! சோகம் போலாம்! உலக போகம் நேரலாம்! வாய் திற! என் வாய்த் தம்பலம் கொள என்று பாடி உடலைக் குலுக்கினள் அந்தப் பாவை!

ஆத்திரம் அந்தணர்க்கு அதிகரித்தது. என்ன அனாசாரம்! சீ துஷ்டை! மோசம் செய்யும் பிரஷ்டை! உன் வாய் நாறும் எச்சிலை யேற்கத் தடியன் வேறு ஒருவன் இருக்கலாம். அங்கே போ! போடி! மரியாதையாகப் போய்விடு என்று ஆகம் அதிர அதட்டினர்.

அவ்வளவுதான் உன் அதிர்ஷ்டம் என்று, அவள் ஒரு நொடியில் அங்கிருந்து ஒதுங்கினள்.

* * *

மல்லாந்து படுத்து உறங்கும் மடைப்பள்ளி யாளரை அணுகினள

ஐயா! ஐயா! எழுந்திரும்! என்று இரைந்து கூவினள். இது என்னடா சள்ளை: எப்படியோ இடம் தெரிந்து வந்து எழுப்பு

---

வெஞ்சினம் வெண்ணீறுய் வெந்துபொடி கண்டுமனம்
அஞ்செழுத்தின் உள்ளே நான் அமர்ந்திடுநாள் எந்நாளோ.

இருயே! பிரஸாதம் ஆய்விட்டது; நாளைக்குப் பார்க்கலாம் என்று, அரைக்கண் உறக்கத்தில் வாய் குழறினர்.

அடடே! உறங்காதே! விழித்துக்கொள்! என்னைப் பார்! தக்க பிரஸாதம் உனக்கு நான் தருகிறேன்!

என்ன பிரஸாதம் அது!

## தம்பலப் பிரஸாதம்!

அட! அப்படியும் ஒரு பிரஸாதமா! கொடு பார்க்கலாம்!

தூக்க மயக்கம் ஒரு புறம். தம்பலப் பிரஸாத பாகத்தையும் சுவைத்துப் பார்க்கலாமே என்ற ஆர்வம் ஒரு புறம். தருபவள் ஒரு இளம் தையல் என்ற தனி சந்தோஷம் ஒரு புறம்!

வாயைத திற! நானே இடுகிறேன் என்றதும், சபாஷ்!...ம்... ம்...ம்...ஆ...ஆ...ஆ...!

குபுக்! குபுக்! என்று வியப்பிற்குரிய தம்பலம், தன் வாயில் வந்து விழுந்தது.

ஆ! என்ன மணம்! என்ன சுவை! விழுங்கியதும், உடலெலாம் பரவியது உதய இன்ப ஊறறு

அதே நேரததில், எதிரில் இருந்த பாவையின் திருமேனி, பசுமை ஒளியெழுப்பி மின்னி விண்ணில் மறைந்தது.

ஹா! ஹா! அதிகம் உழைத்த வைதிகர்க்கோ அனுபவிப்பு இல்லை. காரணம் என்ன? நியதி யுடைய அவர், நிஷ்காமியரா யிருந்தால், உயர்ந்த அவர் மூலம் உலகம் உய்தி பெறும். காமி யத்தில் கருத்து வைததது தவறுதானோ என்னவோ? ஸ்ரீ மீனாட்சி திருவுளத்தை யார் அறிய முடியும்?

மடைப்பள்ளியில் மட்டும் அமுத பாகம் செய்வான்; மற்றைய வகையில் மடையன்; யூகமற்ற தடியன், ஊரவா இப்படி ஏளனம் செய்திருந்த சிகிவாசர்க்கு, வளர வைக்கும் ஸ்ரீ மீனாட்சியருள் வாய்த்தது. இப்போது அவர் அகமும் புறமும் மீனாட்சி. நாவில் அவளது நாதநலம், மின்னி யெழுந்து மிளிர்ந்தது.

பாண்டிய ராஜன் மகளே—என்மேல் க்ருபை
பாலிக்க வேண்டும் அம்மா!

என்ற அரிய கீர்த்தனம் ஒன்றை, உள்ளம் உருகி ஓதியது அவா வாய்.

அன்று முதல் கல்வி, உணர்வு, காண்தகும் ஒழுக்கம் முதலி யன, பெருகி அவரிடம் பிணைந்தன. இந்த விருத்தி இவர்க்கு எப்படி

---

மாய உலகமிதில் மாமோக வாழ்வனைத்தும்
ஓயாத சொப்பனமென்று ஓய்ந்திருப்ப தெந்நாளோ.

வந்தது என்று, எவரும் எங்கும் பேசலாயினர். அவன் இவன் என்பது போய், அவர் இவர் என மக்கள் அழைக்க லாயினர்.

வர வர, ஸ்ரீநிவாசப் புலவர், பக்த ஸ்ரீநிவாசர் என்றே எவரும அழைத்தனர். அவர் பாடிய கீர்த்தனைகள், கல் மனதையும் கரைக்கும். மீனாட்சி சந்நிதியில் அவர் பாடும்போது, தூங்கா விளக்கு முதல் எல்லாத் தீபங்களும், பெரிதும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும். கண்டவர்கள அவர் பக்தி கண்டு, கனிந்த விநயம் காட்டினர்.

இந்த நிலையிலும், அவர் மடைப்பள்ளித் தொழிலை விட்டுவிடவில்லை. அது ஒரு மாபெருங் கைங்கர்யம் என்றே மகிழ்கிறது மனம்.

* * *

ஒரு சிற்றரசர். அவர் தலைசிறந்த பக்தர். மீனாட்சிக்கு அபிஷேகம் செய்ய ஆர்வம் கொண்டார். நம் சீநிவாசரை சந்தித்தார். பிறர் கைப்படாமல், பிரஸாதங்களைத தாங்களே தயாரிக்க வேண்டும் என்று விநயமொடு வேண்டினார். அதற்கு ஆவனவும் அளித்தார்.

மறுநாள் காலையில் அபிஷேகம். முன்னிரவு தூங்கலாம், பின் இரவில் எழுந்து பிரஸாதம் சித்தம் செய்யலாம். இட்ட திட்டம் சரி. ஆனால், முன் இரவில் முதல்வினயத தியானித்தார். பின் இரவில், உடலில் பெரிதும் அயர்ச்சி பிறநதது.

சிறிது நேரம் சிரம பரிகாரம் செய்துகொள்ள நினைததார். படுத்தார். அடடா! ஒரே நித்திரை. மெய்ம்மறந்து உறங்குகிறார. காலை மணி ஏழு.

டமால்! படால்! டும்! டம்! என்ன அது? ஓ! கதவைத் தட்டுகிற ஓசை. திடுக்கிட்டு விழிததார் எழுந்தார். விரைந்தார். கதவைத திறநதார். அரச சேவகன் ஒருவன். பயங்கர தோற்றம். கையில் தடி.

ஏன் கதவைத தட்டுகிறாய்?

ஏனா? விடிந்து ஐந்து நாழிகையாகியும், மடைப்பள்ளிக் கதவை ஏன் திறக்கவில்லை? அது கிடக்கட்டும். அர்ச்சகர் நிவேதனங்களைக் கொண்டு வரச் சொல்கிறார். உம். உடனே புறப்படும்! அதிர்கிறது அவன் குரல்!

இங்கே சித்தமாக வேண்டாமா? ஆ! இனி மேலா என்று உறுமினன் சேவகன்.

அஞ்சிய பக்தர் ஸ்ரீநிவாசர் உள் நுழைந்தார். என்ன செய்வேன் என்று அவர் உடலாடியது.

என்ன வியப்பு! எங்கும் கமகம என்ற திவ்ய மணம். என்ன இது என்று நாற்புறமும் நோக்கினர். என்ன என்ன நிவேதனப்

பொருள்கள் தேவையோ, அவைகட்கு மேலான பண்டங்கள், பாகமாகி, எடுத்துச் செல்லும் அளவில் அல்லவா இருக்கின்றன!

என்ன அதிசயம்! யார் செய்த செயல் இது? உலகை மறந்து உறங்கிவிட்டேன். அரச கோபத்திற்கு ஆளாக நேருமே என்று அஞ்சிய நம் பணியாள்கள், பாகம் செய்து வைத்தனரா? அவர்கள் இவ்வளவு சுமுகயாகப் பாகம் செய்ய முடியாதே! இருக்கட்டும், பிறகு விசாரிப்போம் என்று எண்ணினர்.

நிவேதனப் பொருள்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சென்றார். உரிய இடத்தில் ஒப்படைத்தார். நியதியாக ஆராதனை நிறைவேறியது. அரசர் அமைச்சர் தம்பதிகள், அம்பிகை சந்நதியில் ஆநந்தக் கண்ணீர் பெருக்குகிறார்கள். ஏராளமான பக்த ஜனக் கூட்டம்.

ஐயோ! ஐயோ என்ற அலறல்! அம்மை மூக்குத்தி காணோமே என்று, அலைமோதித் துடிக்கிறார் அர்ச்சகர். தேவியை எண்ணியிருந்த பக்தர் இதயங்கள் திடுக்கிட்டன. பதைக்கிறார்; துடிக்கிறார்; கண்ணீர் வடிக்கிறார் அர்ச்சகர்.

பொய்! எங்கேயும் போயிராது! எடுத்தால் நீர்தான் எடுத்திருக்க வேண்டும்! அரசர் அறிந்தால், நாளை வீணாக உமது கையை வெட்டிவிடுவார்! ஜாக்ரதை! மரியாதையாக, அதைக் கொண்டு வந்து கொடுத்துவிடும்!

ஹா! நானா? அங்கயற் கண்ணி! பக்தர் இதயங்களைப் பார்ப்பவளே! எனக்கு வயது இப்போது எழுபது. பதி னாறு வயது முதல் உன்னையே பஜித்தேனே! கா தேவீ! கயல் கண்ணி மூக்குத்திக் கள்ளன் என்ற பெயர் வாராதபடி, எங்கே உனது மூக்குத்தி காட்டு தாயே! காட்டு அம்பா! அம்பா என்று கதறினர். புனித அவர் அலறலை, எவரும் பொருட்படுத்திலர். அவரவர் தம் மனம்போன போக்கில் பேசுகின்றனர். எங்கும் ஒரே கலகலப்பு.

ம்...உம்...ம்...உம்...ம் என்ற உறுமல் ஒலி கேட்டு, திடுக்கிட்டு அரச தம்பதிகள் திரும்பினர். அமைச்சர் மகள்மேல், மீனாட்சி ஆவேசித்திருக்கிறாள். ஆ! ஹா! துள்ளி விளையாடுகிறாள் எங்கள் தூய தேவி.

தாயே! என்ன செய்ய வேண்டும் அடியேன் என்று விநயமொடு வேண்டினர் வேந்தர். கல கல ஒலி யடங்கியது.

பார்த்த கண் வாங்காமல், யாவரும் ஆவேச மகளையே பார்க்கலாயினர்.

என் பக்தன் சிவாசன், முன் இரவில் என்னையே எண்ணியிருந்தான். உடல் தளர்ந்து, பின் இரவில் உறங்கினன்; அவன் செயலை யான் ஏற்றேன். மடைப்பள்ளி யிருள் விலக, வாய்த்த மூக்குத்தியைக் கழற்றி மாடத்தில் வைத்தேண்டா! அது அங்கேயேதான் இருக்கிறது. போய் எடுத்து வாருங்கள்! ம்...உம்...ம்...உம்...ம் என்று ஆவேசம் மலையேறியது. பக்தர்கள் எவர்க்கும் மெய் சிலிர்த்தது.

வியந்தார் வேந்தர். ஓட்டம் பெரு நடையாக ஓடினர். உயர்ந்த மாடத்தில் ஒளி வீசியிருந்த நாசியணியைக் கண்டார். எடுத்தார். கண்களில் ஒத்திக் கொண்டார். கொண்டு வந்தார். அர்ச்சகரிடம் அளித்தார். அர்ச்சகர் மூலம், அது தேவி திருமுகத்தில்மின்னியது அர்ச்சகரோ,

அம்பா! சிறிது நேரத்தில், ஒரு அன்பர்க்காக என்னை அதிர வைத்துவிட்டாயேஎன்று,தொழுதுதுதித்துஅழுதார்.

விவரம் உணர்ந்த சிவாசர் உள்ளம், விம்மி விம்மி யடங்கியது. தேன்போல் இனிக்கும் ஒரு கீர்த்தனையால், பரிந்து இந்த ஆடலைப் பாடினர்.

"பாகஞ்செய் தென்னுவைப் பாடவுஞ்செய் தாய்தாயே!
ஊகமிலாற் கின்று முதவினுய்—சோகந்தீர்
காதகலக் காட்டுகின்ற நான்மறையாந் தண்டைசேர்
பாதகிழல் யான்தக்கப் பண்"

பாடுகிறார்: மேலும் பாடிக்கொண்டே யிருக்கிறார். அவர் கண் மழையும் கவி மழையும் கண்ட காவலர், அவர் அடி மலர்களில் வீழ்ந்தார். அவர் மேல் தனக்குண்டான அன்பை, தான் பொழிந்த கனக மழையால் காட்டினர்.

* * *

மீனுட்சி கீர்த்தனம், மீனுட்சி துதி, மீனுட்சி மாலை முதலிய பல நூல்களைச் சிவாசர் செய்தார். சோணைமாரி போன்ற அவர் கவிதைகளை, தமிழ்நாடு மனனம் செய்து மகிழ்ந்தது.

பலர் கேட்டுக் கொண்டபடி, ஸ்ரீ வேணுகோபாலன் பதங்கள் என்னும் சிறந்த ஒரு பிரபந்தம் செய்தார். அது, புலவர் பலர் முத்திரை வைத்த அருமை நூல்.

* * *

மதுரையில் ஒரு முகம்மதியர். அவர் பெரும் செல்வம் பெற்றவர். அவர்க்கு ஒரே மகள். தன் மகள், தமிழ் கற்க வேண்டும் என்ற ஆசை அவர்க்கு இருந்தது. அதற்குத் தக்க ஆசிரியர் யார்?

ஒழுக்கம் மிக்கவர். அம்பிகை அருளைப் பெற்றவர். ஆம். சிவாசர்தான் அதற்குத் தகுதி யென்று அறிந்தார். அவரைச் சந்தித்தார். தன் கருத்தை அறிவித்தார். என்னுல் முடியாது; முடியவே முடியாது என்று ஒவ்வொரு தரமும் சிவாசர் மறுத்தார்.

இரங்கியது ஒருநாள் இதயம். உடன்பட்டு அவர் மாளிகைக்குச் சென்ருர். முகம்மதிய மாதிற்கு வித்தையை முறையாகக் கற்பித்தார். வனிதை கல்வியில் வளர்ச்சியடைந்தாள். கற்பிக்கும் காலத்தில், நம் புலவரை, அவள் கருத்தூன்றி நோக்கலாயினள். தேவியருளால் விளைந்த அவர் தேஜஸ், வர வர அம்மங்கை நல்லாளை மயக்கியது. கற்றது போதும் என்ற முடிவிற்கு வந்த அவள், அவர்க்கே திருப்பிக் காதல் பாடம் கற்பிக்க லாயினள்.

ஆண்மகன் நெய்க்குடம்; பெண் மணிகள் நெருப்பின் சொருபர். நெருப்பின் அருகில் நெய்க்குடம் இருக்கலாமா? இருவரும் சேர்ந்து படிக்க வேண்டும்; சேர்ந்து விளையாட வேண்டும் என்பது இன்றைய அறிஞர்கள் வாதம். அவர்கள் பிறப்பில் ஏதோ தோஷம் இருக்கிறது. வாலறுந்த நரிகள்போல், மற்றவரையும் தம் நிலைக்குக் கொணரச் செய்கின்ற சூழ்ச்சிதானே என்னவோ? இத்தகைய சந்தர்ப்பங்கள் பலவற்றை எண்ணித்தான் திருவள்ளுவர், இன்னேரைக் "குலத்தின் கண் ஐயப்படும்" என்று குறிப்பிடுகின்ருர்போலும்.

மேலும் பருவ மாதர் உறவு பாழ் என்பது இந்நாட்டுப் பழமொழி. எவ்வளவு சிறந்தவர் சிவாசர்? அவர் மன நிலையும் மாறியதே? இவைகளை யெல்லாம் எண்ணும்போது அதிர்கிறதே நம் இதயம்! அதிகம் பேசுவானேன்! பலநாள் நடந்தது களவுக் கலப்பு.

அவளுடைய முன்னைய புண்ணியமும், இவருடைய பிராரத்துவமும் இருந்தவாறு இவ்வாறே? பாராட்டுதல் மிக்க சிவாசர்க்கு, இதனுல் எங்கும் பகையும் அவமதிப்பும் பரவியது.

முகம்மதியர் செவிக்கு எட்டியது செய்தி. படபடத்தது மனம். பதைத்தது உடல். துடித்தது மீசை. விறு விறுத்து எழுந்தார். சீநிவாசா! என் மகளை மணந்து கொள்! உலகறிய இஸ்லாமியன் ஆகவேண்டும் நீ! இணங்காவிடில், உன்னை லேசில் விடமாட்டேன் என்று, கொள்ளித் தேள்போல் குதித்தார்.

மாபெரும் உமது மகளை மருவியது உண்டு. அவளுடன் இன்றுள்ளபடியே என்றும் இருப்பேன். இச்சூழ்நிலை, எம்பெருமாட்டியின் திருவருள் என்று எண்ணுகிறது இதயம். உமது மகளைக் கைவிடமாட்டேன்; இதற்காக மதம் மாற மாட்டேன். வேதியர்களுடைய மற்ற நியதிகளை விட்டுவிடவும் மாட்டேன்! என்று விறுவிறுத்தார் சீநிவாசர்.

அவர் மகள், இந்த அதிர்ச்சியை அறிந்தாள். ஓடி வந்தாள். கடுஞ்சினம் கொண்ட தந்தையின் கால்மேல் வீழ்ந்தாள்.

அப்பா! உம்மேல் ஆணை! மாபெரும் அவரை யன்றி, பிறரை மணக்க மாட்டேன். அவரை உபாதிக்க வேண்டா. அவர் இஷ்டப்படியே சேர்ந்து வாழ்வேன். உமக்கு இது உடன்பாடில்லையேல், முதலில் என்னைக் கொன்று விடும்! உமது உறவினருடன் சேர்ந்து நீர் வாழ்ந்திரும் என்று கதறினள்.

செல்வமாக வளர்ந்த ஒரு மகள். அதுவும் தாயிழந்தவள். அவள் வார்த்தைகள் அவர் உள்ளத்தை வாளிட்டறுத்தது. மறுமொழி உரைத்திலர். அவள் எண்ணப்படியே விட்டு விட்டார்.

சீநிவாசரும் அவளும் சேர்ந்து வாழ்ந்தனர். இதற்குத் தந்தையும் உடன்பட்டிருப்பதைக் கண்ட மகம்மதியர்கள், வீணே அவரை இனத்திலிருந்து விலக்கினர்.

வைதிக வேதியர்களும், சீநிவாசரை ஒதுக்கினர். மடப்பள்ளி உத்யோகம் கைமாறியது. எங்கும் ஏளனம் பெருகி எழுந்தது. ஆ! விதி எப்படி யெப்படி விளையாடுகிறது?

* * *

அந்நாளில், திருநெல்வேலியைத் தன்னதாக்கினன் ஒரு மிலேச்சன். அவன் கொடுங்கோல் ஆட்சியால், வானம் மழையை மறுத்தது. பஞ்சம் நாட்டில் படர்ந்தது.

அவன் ஒருநாள், வைதிக வேதியர்களை அழைத்தான். உங்கள் மத நூற்களில், மழை பெய்ய ஏதேனும் வழி சொல்லி யிருக்கிறதா? என்ற கேள்வியை எழுப்பினன்.

ஆயிரம் வேதியர் கூடி, ஒரு மண்டலம் வரை வருண ஜெபம் செய்தால், மழை பெய்வது திண்ணம். அதற்கு ஒரு லட்சம் பொன் தேவைப்படும் என்றுர்கள் மறையோர்.

குதூகலித்த கொடுங்கோலன், அப்படியே கொடுத்தான். பொன் பெற்ற வேதியர் ஆயிரவர், காந்திமதியம்மை ஆலய வாயிலை அணுகினர்.

அவர்கள் எவரும் தப்பி ஓடி விடாதபடி, கொலைக்கஞ்சாக் கொடியோர், காவல் செய்யலாயினர். அதனுடன், அநியாய அந்த அரசனே அங்கு வந்தான்.

மண்டலம் ஒன்றில் மழை பெய்ய வேண்டும். தவறினுல், நீங்கள் எமது மதத்தைத் தழுவ வேண்டும்; புலாலை எம்மொடு புசிக்க வேண்டும். அதற்கு உடன்படவில்லையேல், ஆயிரவர் கண்களையும் பெயர்த்துக் காக்கைகட்கு விருந்து வைப்பேன்! என்று கறுவிச் சென்றுன்.

நான் மறையாளர், அவன் மன நிலை யறிந்து நடுங்கினர். அஞ்சி யஞ்சி வருண மந்திர ஜபம் நடைபெறுகிறது. பாதி மண்டலம் பறக்கது. வேகிறது. மனம் நோகிறது. அட அநியாயக் கலியே! என்று அலறுகின்றனர். மென்மேலும் உக்ரமாக மந்திரம் உருவேறுகிறது.

நம் சிவாசர், எதிர்பாராமல் திருநெல்வேலிக்கு வந்தார். காந்திமதியைச் சேவிக்க வேண்டும் எனும் ஆர்வம் தான் காரணம். அவரை யாவரும் கண்டனர், முஸ்லிம் மகனை மணந்தார் என்று அறுவறுப்பாகத்தான் இருந்தது. அவர்களுள் ஒருவர் துணிந்தார். எழுந்து வந்தார். அந்தணர் நிலை கூறி அழுதார்.

ஐயா! காந்திமதி கருணை புலனுக, ஒரு கவி பாட மாட்டீரா! சிறிது மழை பெய்தாலும் போதும். உயிர் பிழைத்தோம் நாங்கள். இன்றேல் எம் கதி அதோ கதி தான் என்று அலறினுர்.

அவர்கள் நிலைமையை உணர்ந்த சிவாசர், அஞ்சாதீர்கள்; காந்திமதி கருணை பாலிப்பாள் என்றுர்.

உடனே ஜெபம் செய்யும் ஆயிரவரையும் வலம் வந்து வணங்கினுர். அதன்பின் புநித தேவியின் சந்நிதியில் புகுந்தார்.

தாயே! உன் சேய் வந்திருக்கிறேன்! உன்னையே ஆராதிப்பார் உள்ளம் புண்ணுகலாமா? தேவீ! என்ன செய்வதென்று தோன்ருமல் நெஞ்சம் இடிகின்றனரே!

"மழையே பெய்யவேணும்—வடிவே நல்ல
மழையே பெய்ய வேணும்"

என்ற கீர்த்தனையை உள்ளம் கனிந்து ஓதினுர்.

என்ன அற்புதம்! எங்கெங்கேயோ இருந்த மேகங்கள் ஒன்று கூடின, மின்னின; இடித்தன. சள சள என மழைத் தாரை பெய்தன.

பெய்த பெருமழையால், தாம்பிர பரணியில் வெள்ளம் பெருகியது. நீர்நிலைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. இனி மேலும் பெய்தால், ஊரே அழியும்போல் தோன்றியது. அஞ்சினன் மிலேச்ச அரசன். ஜபந்தான் மழைக்குக் காரணம் என்று எண்ணினுன் ஆதலின் ஓடி வந்தான். நிறுத்துங்கள் ஜபத்தை! போதும் போதும் என்று மன்ருடி, ஜபத்தைத் தடை படுத்தினன்.

அந்தணர்கள் சீநிவாசரைக் கொண்டாடினர். அம்பிகை அருட்குப் பாத்திரரான நீர், எது செய்தாலும் தவறில்லை; எம் குறையை மன்னிக்கவும் என்று வேண்டினர்.

நமஸ்காரம்! ஐயன்மீர்! உங்கள் ஆசியை ஏற்கிறேன். என் களங்கம் என்னுேடே போகட்டும்! பந்தி போஜனம் செய்ய வற்புறுத்த வேண்டா. எளிய என் கீர்த்தனையை ஏற்க, அம்பிகை இப்படி ஒரு ஆடல் காட்டினள் என உணர்கிறது, என் உள்ளம்.

வருண மந்திரத்திற்கு வலியில்லை என்று எண்ண வேண்டா. அந்த மந்திர சக்தி, உங்கள் இலட்சம் பொன் ஆசையால் சிறிது அடங்கி யிருந்தது. அவ்வளவே. வருகிறேன் என்று சென்ருர்.

அதன்பின் அவர் அக ஒழுக்கத்தையும், திருவருள் பெற்றிருந்த திறத்தையும், போற்றி உலகம் புகழ்ந்தது. எம்பெருமாட்டி திருவடி நிழலில் அவர் ஆன்மா, இன்றும் இன்பம் மாந்தி யிருக்கிறது. வாழ்க தேவிதாஸர்கள்.

# THREE SUGGESTIONS

An immediate necessity for toning up the spirit of worship in temples is to mark off the Holy of Holies and the immediate artha mandapam and a part of the maha mandapam as a part of the temple where worshippers ought to observe complete silence and meditation. Except for the recitation of the lord's names or stotras, any talks and conversations about mundane matters ought to be tabooed in that part of the temple. This will encourage the worshippers to move into that holy atmosphere with the mere recital of the holy name of God and will greatly help in setting up an atmosphere of true divine presence. The next two things which will greatly assist the achievement of the object of temples are to make it compulsory that every temple must have a mathar Sangam (மாதர் சங்கம்) and a Sat Sangam. These will be the association of devotees meeting atleast every week or fortnight for the dessemination of the truths of religon, and the talks and lectures and bhajanas conducted in these songs will go a great way in building up the devotion and character of the people in the neighbourhood. We cannot afford to wait until the whole country becomes literate. What is contained in the Sacred books is intended to be conveyed by the ear rather than by the eye. The ideals behind the idols are intended as instruction through the eye. But the most important means of spreading faith and character must for long time to come be only through Sath-sang and through the ear. What is heard and learnt is often times more impressive and fruitful than what is merely read. With necessary adjustment to suit individual cases, a system like this will greatly conduce to the achievement of the object of temples.

—*Thiruppugal Mani.*

155

அல்லல் தீர்த்தன்பர்க் கமுதம் அளித்தவன்
ஆடு மாகாளி வாத மொழித்தவன்
எல்லை யில்பெரும் பெருமை விளைத்தவன்
என்றுனைப் போற்றி ஏத்திலன் அன்றியே
கல்லையோ தொழு தேத்திலன் என்மனக்
கவலை தீர்த்தரு ளாதது நீதியோ
சொல்லவா கதி வேறறி யேன்மதி
சூடி மால் விடை யேறும் பெருமனே

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR :: MADRAS-90.

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீ
நெ. 1506

—156—


**Coffee**

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113


## அரிய தெய்வ அருள் நூல்கள்

ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் (அச்சில்) | | | |
| சிவநேயச் செல்வர்கள் ,, | | | |
| கணபதி பக்தர்கள் ,, | | | |
| முருகனடியார் ,, | | | |

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**


Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S.